மலர்-3 இதழ்-58 ஜனவரி 16-31 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

# மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்



# நாலே வரியில இறை தத்துவம்

நான்கு வரியில் நறுக்கென்று இறை தத்துவத்தை சொல்லிவிட்டார் சிவவாக்கியர்..

"ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதியை"
நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்து போய்.
வாடி வாடி வாடி வாடி மாண்டு போன மாந்தர்கள்.
கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே.

**பொருள்:**

அறிவு சொரூபமான, அடி முடி காணமுடியாத,எங்கும் நிகழ்ந்த ஆண்டவனாகிய ஈசனை அங்கும் இங்கும் ஓடி ஓடி தேடுகின்றீர்கள்.

அவன் உங்கள் உடம்பின் உள்ளே கலந்து அறிவாகவும், ஆற்றலாகவும் விளங்குவதைக் காணாது, அவனை நாடி பற்பல இடங்களுக்கும் ஓடி ஓடி தேடியும், அலைந்தும் காண முடியாமல் ஆயுள் நாட்கள் கழிந்து போய்க் கொண்டிருக்கிறது.



உடலுக்குள் உயிராகவும், உயிருக்குள் அறிவாகவும் அவன் உட்கலந்து நிற்பதை அறிய முடியாமல் மாண்டு போகும் மனிதர்கள் எண்ணற்ற கோடி.

இம்மானிடப் பிறவியை பெற்ற இவர்கள் என்றுதான் அறிவான(ஜோதி) இறைவன் தம்முள்ளே கலந்து நிற்பதை உணர்ந்து கொள்வார்களோ?

தம்முளே உறையும் உயிரை உணர்ந்து, உயிரை ஈசனிடம் சேர்த்து பிறவா நிலையை அடைய முயலாமல் அவனை அகிலமெங்கும் தேடி ஓடி நாடி வாடி இறந்து போகின்றனரே என்று சிவ வாக்கியர் கூறுகிறார்.

# ஆறுகால பூஜையும் ஆருத்ராவும்



திருக்கோயில்களில் இறைவனுக்கு ஆறுகால பூஜை நடைபெறுவது வழக்கம், இன்று ஒருசில கோயில்களில் ஒரு கால பூஜை நடைபெறுவதற்கே சிரமமாக உள்ளது. இந்த ஆறுகால பூஜையை மையமாக வைத்துத்தான் ஆருத்ரா தரிசன காலமும் வகுக்கப்பட்டுள்ளது. வருடத்திற்கு ஆறு முறை நடைபெறும், "ஆருத்ரா தரிசனம்" எனப்படும் நடராஜர் அபிஷேகம், ஒவ்வொரு அபிஷேகத்திற்கும் ஒவ்வொரு நேரத்தை நம் முன்னோர்கள் வகுத்துள்ளார்கள். அவர்கள் வகுத்துள்ள நேரம் ஆறுகாலத்தை உணர்த்துவதாகவே உள்ளது.

1. வைகறையில் மார்கழி.
2. காலை சந்திக்கு மாசி.
3. உச்சிக்காலத்திற்கு சித்திரை.
4. மாலை ஆனி..
5. இரவிற்கு ஆவணி
6. அர்த்தசாமத்திற்கு புரட்டாசி.





# திதி, தர்ப்பணம் உருவான விதம்

திரேதா யுகத்தில் தாயை இழந்த ஒரு குழந்தையை மகரிஷி ஒருவர் பாசத்துடன் வளர்த்தார். வயதான பிறகு அவர் மரணம் அடைந்தார். அப்போது அவர் வளர்த்த குழந்தை முனிகுமாரனாக மாறி இருந்தான். தனக்கு தாயாகவும், தந்தையாகவும் இருந்த மகிரிஷி மரணம் அடைந்ததை முனிகுமாரனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

தன் தந்தை உயிரை பறித்த சூரியன் மீது அவனுக்கு கோபம் ஏற்பட்டது. எனவே தன் தவ வலிமையால் சூரியனை தடுத்து நிறுத்தினான். இதனால் உலகம் இருண்டது. மும்மூர்த்திகளும் தேவர்களும் முனிகுமாரனை சமரசம் செய்தனர்.

அவர்கள் அவனிடம் இனி ஒவ்வொரு ஆண்டும் உன் தந்தை இறந்த அதே நாளில் திரும்பி வருவார். அவருக்கு நீ உணவளிக்கலாம். அதை அவர் ஏற்றுக் கொண்டு ஆசீர்வதிப்பார். பிறகு பித்ரு லோகத்துக்கு திரும்பிச் சென்று விடுவார்'' என்றனர்.

இதற்கு முனிகுமாரன் சம்மதித்தான். ஒவ்வொரு ஆண்டும் அவன் தந்தை இறந்த திதியில் வரத் தொடங்கினார். இப்படித்தான் மறைந்த முன்னோர்களுக்கு பித்ரு தர்ப்பணம் பழக்கம் ஏற்பட்டது. பித்ரு பூஜையினால் நம் குலம் தழைக்கும். பித்ருக்கள் நம் பூலோகத்தில் இருந்து தென் திசையில் உள்ளனர். இதனால் அவர்களை தென் புலத்தார் என்று அழைக்கிறார்கள்.







அமாவாசையன்று சமைக்கும் சாப்பாட்டை நம் முன்னோர்களுக்கு அளிப்பதாக எண்ணி காக்கைக்கு வைக்கிறோம். எனவே, அந்த சாப்பாட்டில் கீரை, காய், கிழங்கு மூன்றும் இடம் பெற வேண்டும். இவற்றில் முக்கியமானது வாழைக்காய். ஏனெனில் முன்னோர் ஆசியால், நம் குலமும் வாழையடி வாழையாக தழைக்க வேண்டும் என்பதற்காகத் தான், சமையலில் வாழை பயன்படுத்தப் பட்டது.

# அமாவாசையும் வாழைக்காயும்



கிருபானந்தவாரியாரின் ஆன்மிக சொற்பொழிவு திருவாரூரில் நடந்தது. அக்கூட்டத்திற்கு வந்த ஒரு சிறுவன் அவர் அணிந்திருந்த மாலையை நெடுநேரமாக பார்த்துக்கொண்டிருந் தான். வாரியார் அதை கவனித்தார்.

தனது கழுத்தில் கிடந்த மாலையைக் கழற்றி பக்கத்திலிருந்த சிறுவனுக்கு கொடுத்தார். வெறும் கழுத்தோடு இருந்த வாரியாரை பார்த்ததும், ஒரு பக்தர் ஓடிப்போய் புதியமாலை அணிவித்தார். வாரியார் சிரித்தபடியே, எப்போதுமே, நாம் நம்மிடமிருப்பதை பிறருக்குக் கொடுத்தால்தான், அடுத்தவர்கள் நமக்கு கொடுப்பார்கள் என்பதை நேரில் பார்த்து புரிந்து கொண்டீர்களா! என்றார், கூட்டம் கைதட்டி ஆமோதித்தது.

# பிறருக்கு கொடுங்கள்



# பக்தின்னா கேசவனை போல இருக்கனும் குருவாயூர் ஏகாதசி பிறந்த கதை

பொதுவாக ஏகாதசியை 25 வகைகளில் கொண்டாடுவார்கள். (உற்பத்தி ஏகாதசி, மோட்ச ஏகாதசி, ஸபலா ஏகாதசி, புத்ரதா ஏகாதசி, ஷட்திலா ஏகாதசி, ஜயா ஏகாதசி, விஜயா ஏகாதசி, ஆமலகி ஏகாதசி, பாபமோசனிகா ஏகாதசி, காமதா ஏகாதசி, வரூதிநி ஏகாதசி, மோகினி ஏகாதசி, அபரா ஏகாதசி, நிர்ஜலா ஏகாதசி, யோகினி ஏகாதசி, சயினி ஏகாதசி, காமிகா ஏகாதசி, புத்ர(ஜா)தா ஏகாதசி, அஜா ஏகாதசி, பத்மநாபா ஏகாதசி, இந்திரா ஏகாதசி, பாபாங்குசா ஏகாதசி, ரமா ஏகாதசி, ப்ரபோதினி ஏகாதசி, கமலா ஏகாதசி) இந்த ஏகாதசிக்கெல்லாம் சிறப்பு வாய்ந்ததாக வைகுந்த ஏகாதசியை உலகம் முழுவதும் கொண்டாடுவார்கள்.

டிசம்பர் ஜனவரி மாதங்களில் வரும். இந்த ஏகாதசி, திருமாலின் இருப்பிடமாகக் கருதும் வைகுண்டத்தின் கதவுகள் திறக்கப்படுவதாக கூறப்படுகிறது. உலகம் முழுவதும் இதுதான் நடைமுறையில் உள்ளது.

ஆனால் கேரள மாநிலத்தில் மட்டும் வைகுந்த ஏகாதசியை, "குருவாயூர் ஏகாதசி" என்று அழைக்கின்றனர். இந்த நடைமுறை கேரள மாநிலம் முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது. இதற்கு சுவாரஸ்யமான ஒரு பக்தி கதை உள்ளது.

இந்த பக்தி கதை மனிதர்களுக்கும் தெய்வத்திற்கும் சம்பந்தம் கிடையாது, விலங்கிற்கும் தெய்வத்திற்கும் சம்பந்தப்பட்டதாக உள்ளது.

1914 வல்லிய ராஜா என்னும் நிலம்பூர் நாட்டு ராஜா! உள்நாட்டுக் கலகத்தில் அவஸ்தைப்பட்ட தன் குடும்பத்துக்காக வேண்டிக் கொண்டார்!

தன்னிடம் இருந்த பல யானைகளில் ஒன்றை, குருவாயூர் கோயிலுக்கு, தானம் அளித்தார்!

அந்த யானைக்கு கேசவன் என்று பெயர் சூட்டப்பட்டது, யானை என்னமோ குட்டி தான்! இருந்தாலும் சுட்டி! அமைதியான துறுதுறுப்பான சுபாவம், சாப்பிடும் போதும், விளையாடும் போதும், குருவாயூரப்பன் கோயிலைப் பார்த்தவாறே தான் எதுவும் பண்ணும்! அங்கிருந்து தன் கண்ணை மட்டும் எடுக்கவே எடுக்காது! இத்தனையும் பத்தே வயசில்!

இதில் இன்னொரு சிறப்பு என்னவென்றால் மற்ற நாள்களில் உணவு அருந்துவது, நேந்திரம் பழம் சாப்பிடுவது என்று பசியாறும் கேசவன், ஏகாதசி அன்று மட்டும் எதையும் சாப்பிடாமல் உண்ணாவிரதம் இருக்கும்.

ஏகாதசியில் அதற்கு கொடுக்கும் உணவை உண்ணாமல் விரதத்தை கடைபிடிக்கும், ஏகாதசி நாளில் சாப்பிடாமல் இருக்க, எப்படியோ கற்றுக் கொண்டது! என்பது மிகப் பெரிய ஆச்சரியம்.

இதேப் போல தியுலாவின் போது, வித்தியாசமாக நடந்து காட்டும்! முன்னும் பின்னும், வலமும் இடமும், நேர் வாட்டிலும், குறுக்கு வாட் டிலும், அசைந்து அசைந்து செல்வது ஏதோ டான்ஸ் ஆடுவது போல இருக்கும்! மக்களிடம், குறிப்பாகச் சின்னஞ் சிறார்களிடம் கேசவனுக்கு ஏக செல்வாக்கு கூடி விட்டது!

குருவாயூரப்பனுக்கு மட்டும் சேவை செய்யும் நோக்கத்திற்கு மட்டுமே தான் பிறந்ததாக கேசவன் வெளிக்காட்டியது.

பக்கத்து ஊர்களில் நடக்கும் உற்சவங்களுக்கு இது செல்லாது! முரண்டு பிடிக்கும்!

யானைப்பாகன்களிடம் அடி உதை வாங்கிக் கொள்ளுமே தவிர குருவாயூரப்பன் சன்னதியை விட்டு ஒரு அடி நகராது. அங்குசத்தால் அடி வாங்கும்!

ஆனால் அலறாது! பிளிறாது! கண்ணீர் உகுக்கும்! நீர் பெருக்கும்! ஆனால் அப்பவும் குரு வாயூரை விட்டு மட்டும் செல்லவே செல்லாது!

குருவாயூரப்பனை, சும்மா ஒப்புக்குச் சுமக்காமல், மனசிலே சுமந்து விட்டது போலும்!

குருவாயூரப்பன் ஊருலாச் சிலையை (உற்சவர்), மலையாளத்தில், திருவெளி "திடம்பு" என்பார்கள்! ஸ்ரீவேளி, சீவேளி என்று பின் னாளில் திரிந்து விட்டது!

தட்டையான பலகையில், மாயோனின் உருவம் பொறித்து, அதன் கீழே சின்னூண்டு இருக்கும்! அதுக்கு "திடம்பு"ன்னு பேரு, நம் கேசவன், அந்தத் "திடம்பை" யார் வைத்திருக்கிறார்களோ, அவர்களுக்கு மட்டுமே தன் முன்னங்காலை மடக்கும்!

மற்ற யாராய் இருந்தாலும், பின்னங்கால் வழியாக ஏறித் தான், கேசவன் யானை மேல் உட்கார வேண்டும்!

எவ்வளவு தான் தேங்காய், பழம், கரும்பு இனாமாகக் கொடுத்தாலும், அவற்றை எல்லாம் ஒதுக்கி விடும்!

தன் முன்னங் கால்களை மட்டும், வேறு யாருக்கும் மடக்கவே மடக்காது!

கேசவன் யானையின் இந்த தீவிர பக்தியை புரிந்து கொள்ளாதவர்கள் கேசவனை, "திமிர் பிடித்த யானை" என்று பட்டம் கட்டி விட்டார்கள்!

அது "நார்மலான" யானை இல்லை! "ஈகோ பிடிச்ச" யானை என்று பேர் வாங்கிக் கொண்டது!

பக்தியையும், திமிரையும் சரியாக புரிந்து கொள்ளாதவர், கேசவன் யானையின் திமிரை அடக்க சாப்பாடு கூடச் சரியாகப் போடாமல் தண்டிக்கப் பார்த்தார்கள்!

ஆனாலும் கேசவன் யானை தன் முன்னங் கால்களை கிருஷ்ண விக்ரகம் சுமப்பவரைத் தவிர வேறு யாருக்கும் நீட்ட மறுத்துவிட்டது. மற்றவர்கள் பின்னங்கால் வழியாகத்தான் ஏற அனுமதித்தது.

இதனால் கோபம் கொண்ட பாகன்களும், குருவாயூர் கோயில் ஊழியர்களும் கேசவனை மற்ற யானைகளிடம் இருந்து ஒதுக்கி வைக்கப் பார்த்தார்கள்!

ஆனாலும் கேசவனின் வைராக்கியத்தை மாற்ற முடியவில்லை.

சரி யானையின் "ஈகோ"வை அதன் வழியிலேயே அடக்குவோம் என்று நினைத்தார்கள்!

குருவாயூர் அப்பனைத் தானே மனசால் சுமக்கிறாய்? அவனையே உனக்கு இல்லாமல் செய்து விட்டால்?

அன்றில் இருந்து, கேசவன் மேல் மட்டும் குருவாயூரப்பன் "திடம்பை" ஏற்றுவதில்லை!

கேசவனின் முறையே வந்தாலும் கூட, "திடம்பை" அவன் மேல் ஏற்றுவதில்லை! அவனோடு பேசுவதையெல்லாம் குறைத்துக் கொண்டார்கள்!

குருவாயூரப்பனிடமிருந்து கேசவன் யானை மிக அழகாக ஒதுக்கப்பட்டான்!

பிற யானைகளின் மேல் குருவாயூரப்பன் உலா வருவதைப் பார்க்கும் கேசவனுக்கு, தன்னை ஒதுக்குகிறார்கள் என்று நன்றாகத் தெரிந்து விட்டது!

நேற்று வரை கண்ணனைச் சுமந்து வந்த கேசவன், இன்று கட்டையை மட்டுமே சுமப்பவன் ஆக்கப்பட்டான்!

ஆனால் கேசவன் யானை தனக்கென்று எந்த உரிமையும் கோரவில்லை!

தன்னை மட்டும் தான் குருவாயூர் அப்பனின் உலாவுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று அடமும் பிடிக்கவில்லை! மதமும் பிடிக்கவில்லை!

அதன் மனதில் ஒன்றே ஒன்று தான்:

குருவாயூர் அப்பனுக்கு வளைந்த கால்கள், வேறு எங்கும் வளையாமல் இருக்க வேண்டும்!

மற்றபடி, கண்ணன் யார் மீது வலம் வந்தால் என்ன? கண்ணன் ஆசைப்பட்டு வலம் வந்தால் போதாதா?



# குருவாயூர் அப்பனுக்கு வளைந்த கால்கள், வேறு எங்கும் வளைய கூடாது என்பது கேசவன் எண்ணம்

மயிற் பீலி அசைய அசைய, கண்ணன் வலம் வரும் அழகே அழகு!

மற்ற யானை மீது கண்ணன் வலம் வரும் போது கண்ணனைப் பார்த்து கேசவன்யானை ரசித்ததேதவிர, பொறாமை பிடித்து, வீதியுலாவில் மற்ற யானைகளோடு, முரண்டும் பிடிக்கவில்லை! சண்டைக்கும் செல்லவில்லை!

மற்ற பளு தூக்கும் வேலைகளுக்குத் தயங் காது வந்து நிற்கும்! வேலை செய்யும்! ஆனால் அதன் கண்களில் இருந்து குருவாயூரப்பன் சன்னதி மட்டும் விலகாமல் பார்த்துக் கொள்ளும்.

1970 மார்கழி மாசம் குருவாயூர் ஸ்ரீகோயிலில் ஏகாதசி விளக்கு விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. விளக்கு மாடம் முழுக்க சுடர் விடும் விளக்குகள்! அம்மே நாராயணா, தேவீ நாராயணா என்ற கோஷங்கள்! நம்ம கேச வன் மேல் மாயக் கண்ணன் உலா வர வேண்டிய முறை!

ஆனால் ஸ்ரீவேளி உற்சவத்தை இன்னொரு யானையைக் கொண்டு முடித்து விட்டார்கள்! கோயில் நடை சார்த்தப்பட்டது! கோயிலுக்கு வெளியே கொட்டடியில் படுத் துக் கொண்டான் கேசவன்!

கண்ணனை சுமக்க முடியாத நிலை ஏற்பட்டதை எண்ணி ஒருவித மனச்சோர்வுடனேயே இருந்த கேசவனுக்கு இன்னுமொரு அதிர்ச்சி காத் திருந்தது.

குருவாயூரப்பன் கோயிலில் தீ விபத்து ஏற்பட்டது. மேற்குச் சுற்றம்பலத்தில் பிடித்துக் கொண்ட தீ, கூத்தம்பலத்துக்குப் பரவி, கிடு கிடுவென்று வளர்ந்து, நாலம்பல விளக்கு மாடங்களைப் பற்றிக் கொண்டது! ஏதோ புகைச்சல் வாசனை பார்த்து, யாரோ கூவ, ஒரு சிலர் மட்டும் விழித்துக் கொண்டு பதறினார்கள்!

யானைகளை அவ்வளவு சீக்கிரம், அதுவும் தூக்கத்தில் இருந்து எழுப்ப முடியுமா என்ன?

கோவிலை தன் பார்வையில் இருந்து அகற்றாத கேசவன் மட்டும், நெருப்பைக் கண்டு, அலறி அடித்துக் கொண்டு, எழுந்து ஓடினான்!

“ஐயோ! என் செல்வப் பிள்ளைக்கு என்ன ஆயிற்றோ? என் சின்னக் கண்ணனுக்கு என்ன ஆயிற்றோ?”

அதிகம் பிளிறாத கேசவன், அன்று நள்ளிர வில் படு பயங்கரமாகப் பிளிறினான்!

கேசவன் பிளிறலில் மொத்த குருவாயூரும் விழித்துக் கொண்டது! அவனோ நாலம்பல நடையைச் சுற்றிச் சுற்றி வருகிறான்! புதிய மண்டபம் கட்டுவதற்காக வைக்கப் பட்டிருந்த மணல் மூட்டைகளை, மொத்தமாய் தூக்கிக் கொண்டு வந்து, தொம் தொம் என்று போட...

ஊரே திரண்டது! மணல் கொண்டு வீசியது! தீயணைப்புத் துறை சற்று நேரம் கழித்து வந்து நீரைப் பாய்ச்ச, தீ அணைந்து கோயில் குளிர்ந்தது!

அனைவரும் உள்ளே சென்று பார்க்க...

இன்னும் மூனே மூனு அடி தான்! கருவறைச் சுவர்! அது வரை அத்தனையும் மொத்தமாய் கருகி இருக்க... ஸ்ரீகோயில் வாசல் மாலைகள் மட்டும் கருகாமல் இருந்தது...

ஸ்ரீகோயில் தப்பியது! சின்னிக் கிருஷ்ணன் தப்பித்தான்! துவாரகையில் கண்ணனே வழிபட்டு, பின்னர் உத்தவர் வழிபட்டு, குருவும் வாயுவும் அந்த விக்ரகத்தைக் கொண்டு வந்து, அம்மையப்பனான பார்வதி பரமேஸ்வரன் அருளால் பிரதிட்டை செய்யப்பட்ட அந்த... குருவாயூரப்பன் தப்பித்தான்!

தீயைக் கண்டால் ஓடி ஒளியும் யானை களிலிருந்து மாறுபட்டு, குருவாயூரப்பனை காக்க கேசவன் யானை செய்த சாகசங்களை பார்த்த மக்கள் நெகிழ்ந்தே போனார்கள். கேசவன் யானை மட்டும் துரிதமாக செயல்படாமலிருந்தால் குருவாயூரப்பன்....?

சமூக ஊடகங்கள் வளர்ச்சியடையாத கால சூழ்நிலை நிலவியதால், தீயிலிருந்து குருவாயூரப்பன் தப்பிக்க கேசவன் செய்த பெரு முயற்சி உலகெங்கும் மெதுவாக பரவியது.

பக்தர்களின் பக்தியை உலகரியச் செய்ய குருவாயூரப்பன் செய்த லீலையாகக் கூட இது இருக்கலாம், பக்திப் பழமான கேவன் யானையின் பக்தியை உலகறியச் செய்ய, குருவாயூரப்பன், தான் குடி கொண்ட இடத்தையே நெருப்பிற்கு அர்ப்பணித்திருப்பான் என்றே எண்ணத் தோன்றுகிறது.

இந்த தீ விபத்திலிருந்து, கேசவன் மனதைப் புரிந்து கொண்டார்கள் மக்கள், கோயில் நிர்வாகமும், கேசவன் “ஈகோ” பிடித்த ஜீவன் அல்ல! “கண்ணனை”ப் பிடித்த ஜீவன் என்பதை லேட்டாகப் புரிந்து கொண்டார்கள்.

குருவாயூரப்பன் ஸ்ரீவேளியான “திடம்பு”, மீண்டும் கேசவன் மேல் ஏறியது! கேசவன் வெகு நாள் கழித்து, முன்னங் கால்களை மடித்தான்! ஸ்ரீவேளி பிடித்தவர், அவன் கால் மேல் ஏறி, அவன் மேல் ஏறினார்! பின்னங் கால்கள் வழியாகப் பலரும் ஏறினார்கள்!

நெடுநாள் கழித்து நடையழகு! மீண்டும் கேசவன்யானை மீது கண்ணன் உலா!

இத்தனை காலம் மனதளவிலும், உடல் அளவிலம் சோர்வடைந்திருந்த கேசவன் மீண்டும் கண்ணனை சுமந்ததால் சற்று தெம்பும், சுறுசுறுப்பும் அடைந்திருந்தாலும், முழுவதும் பழைய நிலைக்கு திரும்பாமல் இருந்தது.

1976 டிசம்பர் மோட்ச ஏகாதசி என்னும் வைகுந்த ஏகாதசி! குருவாயூரப்பன் “திடம்பை”, கேசவன் மேல் ஏற்றுகிறார்கள்! ஏற்றிய சில வினாடிகளிலேயே, தன்னிலை இல்லாமல் கேசவன் கீழே சரிந்து விழுகிறான்!!!

அவசரம் அவசரமாக, “திடம்பை”, இன் னொரு யானைக்கு மாற்றுகிறார்கள்! தொடங்கிய புறப்பாட்டை முடிக்கணுமே! சாஸ்திர விதி ஆயிற்றே!

கேசவனின் மூச்சு இழுக்க இழுக்க... “கேசவா... உனக்கா இந்த மரண அவஸ்தை?” மக்கள் மிகப்பெரிய வருத்தத்துடன் கேசவனைப் பார்த்து கண்ணீர் வடிக்க...

கேசவனோ, இன்னொரு யானையின் மேல், குருவாயூரப்பன் உலா வரும் அழகை, இன்பமாகப் பார்த்து முடித்தான்!

வீதியுலா முடிந்தது! ஸ்ரீவேளி முடிந்தது! அதே சமயம் கண்ணன் மீது அளவிலா காதல் வைத்த கேசவன் யானையின் ஜீவனும் முடிந்தது!

கண்ணன் மீது வைத்த கண் வாங்கவில்லை கேசவன்! உயிரை மட்டும் வாங்கிக் கொண்டான் காலன்!

கேசவன் யானையின் பக்திக்கு கஜராஜ கேசவனுக்கு நடைபெற்ற சடங்கில் மக்கள் வெள்ளம் கலந்து கொண்டு கண்ணீர் அஞ் சலி செலுத்தியது. கேரள அரசு, கேசவனைக் “கஜராஜன்” என்று பிற்பாடு கொண்டாடி... குருவாயூர் வீதியிலே, பன்னிரெண்டு அடிச் சிலையாக எழுப்பியது!

கேசவன் யானை வைகுண்டலோக பதவி அடைந்த ஏகாதசியை இன்றும் கேரளாவில் குருவாயூர் ஏகாதசி என்றே அழைக்கின்றனர். பெரும்பாலான கோயில்களில் குருவாயூர் ஏகாதசிதான் பிரதானமாக கொண்டாடப்படுகிறது.

எதைச் செய்தாலும் ஆடம்பரமாக செய்தால்தான் இறைவன் ஏற்றுக் கொள்வான் என்பது இல்லை, எளிமையாகவும் முழு மனதுடன் பக்தி செய்தால், விலங்குகளைக் கூட, இறைவன் ஏற்றுக் கொள்வான் என்பதற்கு ஒரே உதாரணம் நம்ம கேசவன் யானையே...


ஆன்மிகமலர் மெயில் புக்

# பித்துருதோஷம்

## ஏற்படுவதற்கான காரணமும் செய்ய வேண்டிய பரிகாரமும்



தோஷத்தில் மிக கொடிய தோஷம் பித்துரு தோஷம். இந்த தோஷம் உள்ளவர்கள் வாழ்வில் பல்வேறு இன்னல்களை அனுபவித்த வண்ணம் இருப்பார்கள்.

பணம், வசதி, வாய்ப்பு படைத்திருந்தாலும் ஏதோ ஒரு வித மன சஞ்சலம் இவர்களை ஆட்கொண்டே இருக்கும்.

**தோஷம் வரக்காரணம்:**

- கருச்சிதைவு
- பெற்றோர்களை இறுதிக்காலத்தில் கவனிக்காதது.
- இளைய தாரத்துப்பிள்ளைகள் மூத்தோருக்கு திதி தராதது.
- தந்தைக்கு எத்தனை தாரம் இருந்தாலும் அனைவருக்கும் தவறாமல் திதி தர வேண்டும்.
- ஆண்வாரிசு இல்லாத சித்தப்பா, பெரியப்பா, அத்தை, சகோதரர், ஆகியோ ருக்கு திதி கொடுக்காவிட்டால் வரும்.
- துர்மரணம் அடைந்தவர்களுக்கு திதி கொடுப்பதோடு மட்டுமின்றி கயாசென்று கூபசிரார்த்தம் செய்யாவிடில் பித்துரு தோஷம் வரும்.

குடும்பத்தில் வாழ்ந்து மறைந்த முன்னோர்களை பித்துருக்கள் என்கிறோம். அவர்களுடைய ஆத்மா சாந்தி அடையாததால் வருகிற தோஷம் பித்துருதோஷம்.

**ஜாதகத்தில் கண்டறிவது :**

ஜாதகத்தில் சூரியன் அல்லது சந்திரன் ராகுவுடனோ அல்லது கேதுவுடனோ எந்த இடத்தில் சேர்ந்திருந்தாலும் பித்துருதோஷம் உண்டு.

**பரிகாரம் :**

ராமேஸ்வரம் சென்று திலஹோமம் செய்வதும், கயா சிரார்த்தம் செய்வதும்,காசி, அலகாபாத் சென்று திவசம் செய்வதும் , திருவெண்காடு சென்று திதி கொடுப்பதும் இந்த தோஷத்திற்குப்பரிகாரம்.

**திலஹோமம் :.**

குடும்பத்தில் யாரேனும் விபத்துக்களில் இறந்திருந்தாலோ அல்லது தற்கொலை செய்துகொண்டிருந்தாலோ மட்டும் தில்ஹோமம் செய்ய வேண்டும்.

அனைவரும் இயற்கை மரணம் அடைந்திரிந்தால் திலஹோமம் செய்ய வேண்டியதில்லை.

**தோஷத்தினால் ஏற்படும் தீயவிளைவுகள் :**

- தோஷம் உள்ளவர்களுக்குதிருமணம் நடக்காது அல்லது மிகவும் தாமதமாக நடக்கும்.



- விவாகரத்து ஏற்படலாம் அல்லது அன்னியோன்னியம் இராது. அல்லது குழந்தைபாக்கியம் இருக்காது.
- ஒரு சிலருக்கு கடுமையான உடல் உபாதை. மனநோய் காரணமாக தாம்பத்ய வாழ்க்கை பாதிக்கும்.
- ஒரு சிலருக்கு பலமுறை திருமணம் நடக்கவும் வாய்ப்புண்டு.
- கலப்புத்திருமணம், ரகசியதிருமணம் நடக்கவும் வாய்ப்புண்டு.

இவர்களது குடும்பம் ஜோதிட ரீதியில் எவ்வளவு அதிஷ்டமான கிரகநிலைகள் பெற்று இருந்தாலும் அந்தப்பலனை இவர்கள் அடைய முடியாமல் பித்துருக்களும், பித்துரு தேவதைகளும் தடை செய்கிறார்கள்.

பித்துருக்களின் சாபம் கடவுள் நமக்கு தரும் வரங்களையே தடுத்து நிறுத்தும் தன்மையுடையது.

**பரிகாரம்:**

சிவபெருமானுக்கு சந்தன அபிஷேகம் செய்யவும். இந்த அபிஷேகம் அமாவாசையன்று செய்யவும். இந்த அபிஷேகத்தைப் பார்த்த நாள் முதல் உங்கள் பித்துருதோஷம் விலகும்.

சிவன் கோயில் சென்று அபிஷேகம் செய்ய இயலாதவர்கள் 100 கிராம் பச்சரிசி, அகத்திக்கிரை, 50 கி கருப்பு எள், 100 கி வெல்லம், வாழைக்காய் ஆகியவற்றை அமா வாசை அன்று பசுமாட்டிற்கு கொடுக்க பித்துரு தோஷம் நீங்கும்.

தொடர்ந்து 9 அமாவாசைக்கு இந்த எளிய பரிகாரத்தை செய்ய வேண்டும். இதனால் பித்துரு தோஷம் முழுமையாக நீங்கும்.

**பித்ரு சுலோகம்.:**

ஓம் நம: பித்ரே ஜன்ம தாத்ரே
ஸர்வ தேவே மயாய ச
ஸுகதாய ப்ரசன்னாய
ஸுப்ரீதாய மகாத்மனே"

"என் பிறப்பிற்குக் காரணமான முன்னோர் களே! தெய்வீக சக்தி பெற்றவர்களே! உங்கள் ஆசியால் எங்களுக்கு நல்வாழ்வும் மகிழ்ச்சியும் உண்டாகட்டும். நல்லவர்களால் போற்றப்படும் உங்களை வணங்குகிறோம்"

என்பது இந்த சுலோகத்தின் பொருள்.

# மண்டோதரி

ராவணனை அழித்த பிறகு, போர்க்களத்தில் ராமன் ஓய்வாக தரையை நோக்கியபடி அமர்ந்திருந்தார்.

அப்போது ஒரு பெண்ணின் நிழல் தெரிந்தது. அந்த நிழலுக்குச் சொந்தக்காரியான பெண், அவரது திருப்பாதங்களைத் தொட முயற்சிப்பதை ராமன் நிழலின் நடவடிக்கை மூலம் புரிந்து கொண்டார். உடனே தனது காலை உள்ளிழுத்துக் கொண்டார்.

“நீ யாரம்மா?” என்றார்.

“நான் ராவணனின் மனைவி மண்டோதரி.

என் கணவரை யாராலும் வெல்ல முடியாது என இறுமாந்திருந்தேன். ஆனால் அவரையே ஒருவன் கொன்று விட்டான் என்றால், அவனிடம் ஏதோ உயர்ந்த குணம் இருக்க வேண்டும் என நினைத்தேன். மேலும். க்ஷத்திரிய குல தர்மப்படி, கணவனை இழந்த பெண்ணை வெற்றி பெற்றவன் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் நீ வரவில்லை. ஆச்சரியப்பட்டேன்.

இங்கே நீ என் நிழல் உன் மீது படுவதைக் கூட விரும்பவில்லை என்னும் போது, உன் சிறந்த குணத்தை என்னவென்பேன்! என் கணவரிடம் கூட ரகு குலத்தில் உதித்த ராமன் மனிதன் அல்ல.

உலகைக் காக்கும் பரம்பொருள். விஸ்வரூபன். தன்னுடைய ஒவ்வொரு அங்கங்களிலும் உலகங்களையே தாங்கி நிற்கிறான்.

பாதாள லோகமே அவனது பாதங்கள். பிரம்மலோகமே அவன் சிரசு. கதிரவனே அவனது கண்கள். மேகமே அவனது கேசம். அவன் இமைப்பதே இரவு பகலாகிறது. திசைகளனைத்தும் அவனுக்கு செவிகள். அவனது திருநாமம் எல்லாப் பாவங்களையும் நொடிப்பொழுதில் போக்கவல்லது. அவன் வேதத்தின் சாரம். ராமன் சாட்சாத் தெய்வ வடிவம் என்பதில் சந்தேகம் இல்லை. அவனிடம் பகையை ஒழித்து சீதையை விட்டுவிடுங்கள்’ என்று மன்றாடினேன்.

அவர் கேட்கவில்லை. உன் வெற்றிக்கு காரணம், என் கணவரிடம் இல்லாத ஒரு நற்குணம் உங்களிடத்தில் இருந்தது தான். அதுதான் தங்களின் ஏகபத்தினி விரதத்தன்மை. அதனால் தான் நீ வென்றாய்,” என்றாள்.



அனைத்தும் கேட்ட ராம பிரான் சிறு புண்ணகை புரிந்தார். தன் சுயவடிவான நாராயணனாக அவளுக்கு விஸ்வரூப தரிசனம் கொடுத்தார்.

ராமாயணத்தில் பாக்கியவதியாகத் திகழ்ந்த வள் மண்டோதரி.

## சீதையைக் காத்த மண்டோதரி

சீதையை அபகரித்து வந்த இராவணன, தன் இச்சைக்கு இணங்க அவளை துன்புறுத்தினான். ஒரு பெண்ணின் அனுமதி இல்லாமல் அவளைத் தீண்டினால் தலை வெடித்து மரணமடைவான் என இராவணனுக்கு சாபம் இருந்தது. இதனால் சீதையை சம்மதிக்க வைக்க அவளை பலமுறை துன்புறுத்தினான். எனினும் சீதை ஒருபோதும் இராவணனின் இச்சைக்கு இணங்கவில்லை. ஒரு சமயம் மிகுந்த கோபமடைந்த இராவணன் சீதையின் தலையைத் துண்டிக்க தன் வாளை உயர்த்தினான். அப்போது மண்டோதரி அங்கு ஓடிவந்து இராவணனின் கையைப் பிடித்து, இராவணனைத் தடுத்தாள்.

‘ஓர் ஆணின் மீது விருப்பமில்லாத ஒரு பெண்ணை சம்மதிக்க வைப்பதற்காக அவளைத் துன்புறுத்துவதும், கொலை செய்ய முயற்சிப்பதும் மகா பாதகம். இத்தகைய செயல் உம்மை மட்டுமல்ல, உம்மைச் சார்ந்த அத்தனை பேரையும், உன் சாம்ராஜ்யத்தையும் சேர்த்து அழித்திடும்’ என மண்டோதரி இராவணனுக்கு அறிவுரை செய்தாள். அதன் பின்னர் இராவணன் சீதையைக் கொலை செய்யும் எண்ணத்தை விடுத்தான்.

## மண்டோதரி சீதையின் தாயா?

மண்டோதரி சீதையின் தாய் என வால்மீகி இராமாயணத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆயினும், அத்பூத இராமாயணம், தேவி பாகவத புராணம் மற்றும் சமண இலக்கியங்கள் மண்டோதரியை சீதையின் தாய் என குறிப்பிடுகின்றன. இராமாணயத்தில் சுவாரஸ்யத்தை ஏற்றுவதற்காக அவ்வாறு கூடுதலான கதையை உருவாக்கியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இராவணனின் மனைவியாக இருந்தாலும், சீதைக்கு பாதுகாப்பாக இருந்தாள் என்பதால் சீதா தேவி மண்டோதரியை தாயாகவே போற்றி அழைத் ததால் ஒருசில புராணங்கள் மண்டோதரியை சீதையின் தாயாகவே பாவித்து கூறியதாக கூறப்படுகிறது.

அனுமன் இலங்கையில் ராவணனின் அந்தப்புரம் சென்ற போது, மண்டோதரி ஒழுங்காக உடையணிந்திருந்ததைக் கண்டு, இவள் சீதையாக இருப்பாளோ’ என்று சந்தேகம் கொண்டான். அந்தளவுக்கு ஒழுக்கமுள்ளவளாக விளங்கியதால் தான், கெட்டவனுக்கு வாழ்க்கைப்பட்டும் அவளுக்கு நாராயண தரிசனம் கிடைத்தது...

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033



ஆன்மிகமலர் மெயில் புக்

# மூதாதையருக்கு திதி கொடுக்க சிரஞ்ஜீவி வரம் பெற்ற ஆஞ்சநேயர்

சீதாராம பட்டாபிஷேகம்முடிந்து சில தினங்கள் ஆகியிருந்த நிலையில், ஆஞ்சநேயருக்கு உடம்பும் மனமும் மிகவும் சோர்வடைந்து விட்டன. காரணம்?

ஆஞ்சநேயரின் கனவில், அவர் மூதாதையர் மிகுந்த வருத்தத்துடன் காட்சியளித்தார்கள். ஆஞ்சநேயருக்கு அதன்பொருள் புரியவில்லை. அவர் வசிஷ்டரின் மகனிடம் போய், கனவைச் சொல்லி அதற்கான விளக்கம் கேட்டார்.

அதற்கு வசிஷ்டரின் மகன், “ஆஞ்சநேயா! உன் முன்னோர்களுக்குப் பசி எடுத்திருக்கும். ஆகையால், உன் முன்னோர்களுக்கு நினைவுக் கடன் செலுத்தி, அவர்களுக்கு ஏதாவது கொடு!” என்றார்.

ஆஞ்சநேயரும் அதன்படியே செய்தார்.. ஆனால், முன்னோர்கள் மறுபடியும் கனவில் வந்து வருத்தம் காட்டினார்.

ஆஞ்சநேயர் ஒருவாறு உண்மையை உணர்ந்து கொண்டார். “ஆஞ்சநேயா! நீ பொறுப்பாக எங்களுக்குப் பிண்டம் அளிக்கிறாய். ஆனால், உனக்குப்பின் இவ்வாறு, எங்களுக்கு யார் செய்வார்கள்?”என அவர்கள் வருந்துவதாக ஆஞ்சநேயருக்குப் புலப்பட்டது.

அவருடைய கவலையையும் அதற்கான காரணத்தையும் அறிந்த சீதாதேவி, “ஆஞ்சநேயா வருந்தாதே. கிஷ்கிந்தைக்குச் செல். பெண் பார்த்து அழைத்து வா. நான் திருமணம் செய்து வைக்கிறேன்.அப்புறம் என்ன? உன் சந்ததியர், முன்னோர்களுக்கு உண்டான சிராத்த கர்மாதிகளைச் செய்வார்கள் என்றார்.

அதன்படியே கிஷ்கிந்தைக்குச் சென்ற அனுமன், சுக்ரீவனிடம் விவரத்தைச் சொன்னார்.

சுக்ரீவன், கிஷ்கிந்தைக்கு தெற்கே உள்ள கீச்சட் என்ற நாட்டின் அரசகுமாரியான சிலிம்பா என்பவளைப் பற்றிக் கூறி, அவளை மணம் முடிக்க முயற்சி செய்யும்படி அறிவுறுத்தினார்.

அனுமனும் உடனே அந்த நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார். அவரை சிலிம்பாவிடம் அழைத்துச் சென்றார்கள் அரண்மனைக் காவலர்கள். அனுமன் அவளிடம் தான் வந்த விஷயத்தைச் சொன்னார்.

அவரை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்த சிலிம்பா, அவரைப்பற்றிய தகவல்களையெல்லாம் அவர் வாயிலாகவே கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

பின்னர்,

“காதல் தத்துவத்தைப் பற்றி எவ்வளவு தெரியும்?

ஒரு முத்து மாலைக்கு நான் ஆசைப்பட்டால், அதை எப்படிக் கொண்டு வந்து கொடுப்பீர்கள்?

கோபம் கொண்டு நான் சாப்பிட மறுத்தால், என்ன செய்வீர்கள்?”என்றெல்லாம், கேள்விகளைத் தொடுத்தாள்.

ஆஞ்சநேயர் பதில் சொல்லத் தொடங்கினார்:

‘‘காதல் தத்துவம் பற்றி எதுவும் தெரியாது. ஆனால், அதை சுக்ரீவனிடத்தில் கேட்டால், அவன் காதல் தத்துவத்தைச் சொல்லிக் கொடுத்து விடுவான்.

அடுத்து முத்துமாலை வேண்டுமென்றால், சீதாதேவியிடம் வாங்கிக் கொடுத்து விடுவேன்.

மூன்றாவதாக, நீ கோபப்பட்டு உண்ணாமல் இருந்தால், நானே இரும்பு போன்ற என் விரல்களால் உனக்கு ஊட்டிவிடுவேன். ஆகையால் காலதாமதம் செய்யாதே! அயோத்தியில் சீதாதேவி உன்னை வரவேற்கத் தயாராக இருக்கிறார் என்றார்.

சிலிம்பாவோ ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டு, “உனக்குக் காதலைப்பற்றி ஒன்றுமே தெரியவில்லை” என அவமானப் படுத்தினாள்.

அதனால் கோபம் கொண்ட அனுமன், ஆவேசத்துடன் சிலிம்பாவை நோக்கி முன்னேறினார். அதற்குள்ளாக, சிலிம்பாவின் வீரர்கள் அனுமனைப் பிடித்து கட்டிப்போட்டார்கள்.



“இந்தக் குரங்கைச் சும்மா விடக்கூடாது. இதன் வாலில் பன்னிரண்டு அங்குலம் மட்டும் வெட்டிவிட்டு, தூக்கியெறிந்துவிடுங்கள்!” என உத்தரவிட்டாள் சிலிம்பா.

அதே விநாடியில் அனுமன் ராமனைத் தியானிக்க, அவரைக் கட்டியிருந்த கட்டுக்கள் தளர்ந்தன; உடம்பு இமயம் போல் பிரம்மாண்டமாக வளர்ந்தது. அப்படியே தாவிய அனுமன் சிலிம்பாவின் தலைமுடியைப் பற்றியபடி, ஆகாயத்தில் எழுந்து பறக்கத் தொடங்கிவிட்டார்.

அந்த நேரம், “அட! ஆஞ்சநேயரின் பிரம்மசர்ய விரதம் முடியப் போகிறது” என்று பேசியபடியே அஷ்டதிக்பாலர்களும், வித்யாதரர்களும் ஆஞ்சநேயரை நெருங்கி, “மாருதி! நீங்கள் கொண்டுசெல்லும் பெண்ணைப் பார்க்க விரும்புகிறோம் நாங்கள்” என்று கூறினார்கள்.

ஆஞ்சநேயர் பெருத்தகுரலில் ஒரு முழக்கமிட, அனைவருமாகப் பயந்து மேகக் கூட்டங்களில் போய் மறைந்தார்கள். சிலிம்பா கெஞ்சினாள். தன்னை மன்னித்துவிடுமாறு வேண்டினாள். ஆஞ்சநேயரின் பிடி தளரவே இல்லை. வெகுவேகமாக ஆஞ்சநேயர் போய்க் கொண்டிருந்த போது, கீழே துங்கபத்ரா நதியில் சுக்ரீவன் தன் மனைவிகளுடன் நீராடிக் கொண்டிருந்தது, ஆஞ்சநேயரின் பார்வையில் பட்டது.

அவ்வளவுதான்!

சிலிம்பாவை ஆகாயத்திலிருந்து துங்கபத்ரா நதியில் விழும்படியாக உதறிவிட்டு, முன்பை விட வேகமாகப் பறந்துபோகத் தொடங்கினார். அயோத்திக்கு வெறுங்கையுடன் திரும்பிய அனுமனைப் பார்த்து சீதாதேவி வியந்தார். “குழந்தாய்! ஆஞ்சநேயா! என்ன ஆயிற்று? பெண் எங்கே?” எனக் கேட்டார்.

ஆஞ்சநேயர் தலையைக் குனிந்தபடியே, “தாயே! அவள் என்னை ஏற்கவில்லை. பரந்து விரிந்த உலகில் தெய்வம் எனக்கு மட்டும் மிகவும் குறுகிய இதயத்தைக் கொடுத்திருக்கிறது.அதில்நீங்களும்ராமசந்திரமூர்த்தியும் முழுவதுமாக நிறைந்து இருக்கிறீர்கள். அங்கே வேறு யாரும் இருக்க இடமில்லை”எனக் கூறியவர்,

அன்னையை வணங்கி ஒரு வரம் கேட்டார்:

“அன்னையே! பித்ருக்களின் கடனை அடைப்பதற்காக, நான் எப்போதும் சிரஞ்ஜீவியாக வாழ்ந்து, முன்னோர்களுக்கு உண்டான சிராத்தாதி கர்மாக்களைச் செய்யும்படி, தாங்கள் எனக்கு ஆசி வழங்க வேண்டும்”

சீதாதேவி புன்முறுவல் பூத்து விட்டு, “ஆஞ்சநேயா! உன் விருப்பப்படியே நடக்கும்” என ஆசி வழங்கினார். அதைக் கேட்டு மகிழ்ந்த ஆஞ்சநேயர் கைகளை உயரே தூக்கியபடி “ஜெய் சீதாராம்” என முழங்கினார்.


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

# அகந்தையை அழித்த சிவன்

## பிச்சாடனரின் வரலாறு



பிச்சாடனர் கோலம் தாருகாவனத்து ரிஷிகளின் ஆணவத்தினை அழிப்பதற்காக சிவனார் எடுத்த கோலமாகும். இக் கோலத்தில் இறைவன் 'பிச்சை உவக்கும் பெருமான்' என்றும் அழைக்கப்படுவார்...

பஞ்சகுண சிவமூர்த்திகளில் பிட்சாடனர் வசீகர மூர்த்தி என்று அறியப்பெறுகிறார்...

தாருகா வனத்தில் மகரிஷிகள் நிறைந்திருந்தனர். அவர்கள் கல்விச் செருக்கினாலும், தவ வலிமையாலும் ஆணவம் கொண்டிருந்தனர்.

தாருகாவனத்து முனிவர்கள் சிவபக்தியை விட யாகமே சிறந்தது என்று மமதையில் எண்ணற்ற யாகங்கள் செய்யலானார்கள். அவர்கள் மமதையை அடக்க சிவபெருமான் எண்ணினார்.

உலகில் தாமே பெரியவர்கள்என்றும், மக்களை வழிப்படுத்த தாமே போதுமென் றும், ஒருவருடைய கர்மாவே அவரவர் நற்செயல், தீய செயலுக்குரிய பலனை அளிப்பதாகவும் அவர்கள் நினைத்தனர். எனவே சிவபக்தி தேவையற்றது என்றும் இறைவன் என்ற ஒருவன் தேவையில்லை என்றும் கர்வம் கொண்டனர். இவர்கள் கர்வம் கொண்டால் அவர்களது பத்தினிகள் சும்மா இருப்பார்களா?

முப்பெருந்தேவியர், தேவலோகப் பெண்கள், பூவுலகப் பெண்கள் யாவரும் தங்களைவிட அழகில் குறைந்தவர்களே என்றும், ஈரேழு உலகத்திலும் பேரழகிகள் தாமே எனவும் ரிஷி பத்தினிகள் ஆணவம் கொண்டிருந்தனர். இத்த கைய ரிஷிகளையும், ரிஷிபத்தினிகளையும் நெறிப்படுத்த விரும்பினார் சிவபெருமான். எந்த ஒரு இடத்திற்கும் தங்கு தடையின்றி சென்று வரவும் எந்த வீட்டுக் கதவையும் சுலபமாகத் தட்டி, வேண்டியதைக் கேட்டுப் பெறவும், பிச்சைக்காரன் கோலமே சிறந்தது என எண்ணி னார் ஈசன். எனவே, திடகாத்திரமான வாலிப உடலமைப்புடன் அழகுத் திருமேனி கொண்ட பிச்சைக்காரனாக உருமாறினார்.

திருமாலை, மோகினி அவதாரம் தரிக்கச் செய்து தன்னுடன் அழைத்துக் கொண்டார். தற்போது அமையப்பெற்றிருக்கும் உத்தமர் கோவிலில் இருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில் முனிவர்கள் யாகம் செய்து கொண்டிருந்த தாருகாவனத்தை அடைந்தார். முதலில் பெண் களின் ஆணவத்தை அடக்க எண்ணிய ஈசன், அவர்கள் இல்லம் சென்று, தனது காந்தக் குரலில் பிச்சையிடுமாறு வேண்டினார். வாட்ட சாட்டமான பிச்சைக்காரனைப் பார்த்த ரிஷிபத்தினிகள் அவர் அழகில் மயங்கினர். மோகினியைப் பார்த்ததும் அவர்களுக்கு வியப்பு! உலகில் இப்படி ஒரு பேரழகியா?

ஏழு உலகிலும் தாமே அழகிகள் என்று இதுவரை எண்ணி வந்ததை நினைத்து வெட் கினர். அவர்கள் கர்வம் அழிந்தது. பின், ரிஷிபத்தினிகள் பின் தொடர பிச்சாடனரும், மோகினியும் யாகசாலையை அடைந்தனர். புதிய பிச்சைக்காரனின் அழகில் மயங்கி நிற்கும் தங்கள் பத்தினிகளைப் பார்த்ததும் முனிவர்களுக்கு கோபம் ஏற்பட்டது. எனவே, அந்தப் பிச்சைக்காரனை அழிக்க முற்பட்டனர். யாக குண்டத்திலிருந்து ஒரு யானையை தோன்றச் செய்து, அதை பிச்சாடனரை நோக்கி ஏவினர். ஆவேசமாக வந்த யானையை வீழ்த்தி அதன் தோலை உரித்து உடலில் அணிந்து கொண்டார் பிச்சாடனர்.



பிறகு அவர்கள் அனுப்பிய புலியைக் கொன்று அதன் தோலை இடையில் ஆடையாக உடுத்திக் கொண்டார். அடுத்து அனுப்பப்பட்ட பாம்பும், பிற நச்சுப் பிராணிகளும் அவருடைய அணிகலன்களாக மாறின. அவர்கள் அனுப்பிய பூதத்தை தனது வலது பாதத்தின் கீழ் போட்டு வதம் செய்தார். அவர்கள் அனுப்பிய மந்திரங்களை உடுக்கை ஒலியாக கையில் ஏந்தினார். வேதங்களை பாத சிலம்பின் ஒலியாக மாற்றினார். சூலத்தை தோளில் ஏந்தி, தன் விரிசடை எட்டுத் திக்கும் விரிந்தாட ஈசன் திருநடனம் புரிந்தார். வந்திருப்பது பரமேஸ்வரனே என உணர்ந்த முனிவர்கள் தங்கள் தவறை மன்னிக்கும்படி அவரது பாதங்களில் விழுந்து வணங்கினார். கல்வி கற்பது மனிதன் மேம்படவே என்றும், தவம் இருப்பது உலகிற்கு நன்மை செய்வதற்கே என்றும் முனிவர்களுக்கு உணர்த்திய சர்வேஸ்வரன் தனது பிச்சாடனர் வேடத்தை கலைத்தார்.

# உணர்ச்சிகள் எவ்வாறு ஆன்மாவை மறைக்கின்றன



50 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக



"அப்பொழுது காண்பது (ஆன்மா) அதன் சொந்த நிலையில் நிலைநாட்டப்படுகிறது" (யோக சூத்திரங்கள் 1: 3)

பூஜ்ய குருதேவர் அருளுகிறார்: "இக்கணத்தில் உங்களால் உங்கள் உடலையும், உங்கள் எண்ணங் களையும், உங்கள் உணர்ச்சிகளையும் முற்றிலும் அமைதிப்படுத்த முடியுமானால், நீங்கள் இக்கணமே உங்கள் பேரான்மா, ஆன்மா மற்றும் உங்களுடைய மாபெரும் பிரபஞ்ச உடல் இறைவனின் ஆனந்தத்துடன் துடித்துக் கொண்டிருப்பதை இக்கணமே உணர ஆரம்பிப்பீர்கள். ஆன்மா அதன் சொந்த நிலையில் நிலை நாட்டப்படும்." இறைவனின் ஆனந்தம் இருந்தபோதிலும் அதை உங்களால் உணர முடியவில்லை என்பது விந்தையாக இல்லையா? நீங்கள் இறைவனின் பேரின் பத்தை அறியாமல் இருப்பதன் காரணம் நீங்கள் அகந்தை உணர்வினால் (சித்தம்) மதி மயங்கி இருப்பதுதான்.

நான் உங்கள்முன் ஒரு திரையை வைத்தால் நான் இன்னும் இங்கேதான் இருப்பேன். ஆனால் நீங்கள் என்னைப் பார்க்கமாட்டீர்கள். திரையை எடுத்துவிடுங்கள், நீங்கள் என்னைப் பார்ப்பீர்கள். அதுபோலவே, அகந்தையிலிருந்து (அகங்காரம் அல்லது உடல் உணர்வு நிலை) எழும் உணர்ச்சிகளான திரை இறைவனின் ஆனந்தத்தை மறைக்கின்றது. தியானத்தின் மூலம் திரையை விலக்குங்கள். நீங்கள் அந்த ஆனந்தத்தைக் காண்பீர்கள். உங்களின் உண்மையான இயல்பு அமைதியாகும். நீங்கள் அமைதியின்மை எனும் முகத்திரையை அணிந்திருக்கிறீர்கள்: உணர்ச்சிகளின் தூண்டுதல்களிலிருந்து விளையும் உங்கள் உணர்வு நிலையின் அமைதியற்ற நிலை. நீங்கள் அந்த முகத்திரை அன்று: நீங்கள் தூய, சாந்தமான பரம்பொருள். நீங்கள் யாரென்று நினைவு கூர இதுவே தகுந்த காலம். நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட, அருளாசி பெற்ற ஆன்மா. பரம்பொருளின் ஒரு பிரதிபலிப்பு. உணர்ச்சிகள் எனும் முகத்திரையை அகற்றி விடுங்கள். உங்கள் பேரான்மாவை நேர்கொள்ளுங்கள்.

நீங்கள் கோபம் கொள்ளும்பொழுது அல்லது வெறுப்புநிறைத் திருக்கின்றபோது தீய வேடத்தை அணிகிறீர்கள். ஒருவன் அதிக கோபத்தில் கொலை செய்யக்கூட விரும்புகி றான். அவன் உண்மையில் விரும்புவ தில்லை அதாவது அவனது ஆன்மா விரும்புவதில்லை ஆனால் அவனது ஆன்மா உணர்ச்சியுடன் தன்னை அடையாளம் கொண்டிருக்கின்ற காரணத்தால் அவனது கோபம் அவனை அவ்வாறு நினைக்கச் செய்கிறது. எனவே அவ்விதமான கட்டு மீறிய உணர்ச்சிகளுக்கு உட்பட்டு மனித உணர்வின் சாதாரண நிலையில் இருப்பது நல்லதல்ல. நீங்கள் பலவிதமான மனநிலைகளில் உங்களையே சிறைப்படுத்திக் கொள்கிறீர்கள். மேலும் உங்களுடைய எல்லா துயரங்களுக்கும் இதுவே காரணம். இதிலிருந்து தப்பித்துக்கொள்ள, உடல் உணர்வு நிலையுடன் இணைந்திருக்கும் உணர்ச்சிகளையும் மனவெழுச்சிகளையும் கரைத்து விடவேண்டும். தியானமே அதற்கு வழி".

மேலும் அவர் தொடர்கிறார்: " நீங்கள் ஒரு வைரத்தை ஒரு கருப்புப் பூனை அருகில் வைத்தால் வைரம் கருப்பை எதிரொளிக்கும். வைரம் கருப்பு நிறமென்று நீங்கள் அப்பொழுது சொல்வீர்களா? இல்லை. கருப்புப் பூனையை நீக்கி ஒளியை வைரத்தில் பாயவிடுகின்ற உடனே அது தனது இயற்கை பளபளப்புடன் ஜொலிக்கிறது. அந்தக் கருப்புப் பூனைதான் உங்கள் அமைதியின் மையாகும். அது உங்கள் உணர்வு நிலையை உணர்ச்சி வேகத்தினால் இருளச் செய்து ஆன்மாவின் ஒளியையும் ஆனந்தத்தையும் மறைக் கின்றது. அமைதியின்மையின் உண்மையான இயல்பு எத்தகையது எனில், நீங்கள் ஒரு பொருளிலிருந்து இன்பத்தை உணர்ந்து கொண் டிருப்பதற்குள்ளாகவே, நீங்கள் ஏற்கனவே ஏதோ ஒன்றை எதிர்பார்க்கிறீர்கள். உணர்வால் தூண்டப்படும் பிடிவாதமான ஓர் அதி ருப்தி. ஆனால் உங்கள் ஆன்மாவில் மறைந்திருக்கும் இறை ஆனந்தத்தின் பேரின்பமானது உங்கள் உணர்வு நிலையில் எப்போதும் புதிதாகவும் மாறாததாகவும் இருக்கிறது. அது முழுமையான திருப்தியை அளிக்கும் காரணத்தால் உங்களிடத்தில் இனியும் அமைதியின்மை இல்லை. நான் இன்று உங்களிடம் என்ன சொல்லிக்கொண்டிருக்கிறேனோ அதன் மதிப்பை நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள் என விழைகின்றேன். எல்லாத் துயரங்களிலிருந்தும் விடுதலை பெற அதுவே வழி".

## பற்றற்ற ஆர்வத்துடன் வேலை செய்யுங்கள்

அன்பு குருதேவர் மேலும் கூறுகிறார்: "நாம் இவ்வுலகில் ஆர்வத்துடன் செயலாற்றகற்றுக் கொள்ளவேண்டும். ஆனால் பதற்ற மற்றும் பற்றற்றும் இருக்க வேண்டும். ஒரு யோகியின் எண்ணம் எப்போதும் " உனக்காக, உன்னுடைய தாக" என இருக்கிறது. நான் இங்கே இந்த உலகில் இருப்பது குறுகிய காலத்திற்கு மட்டுமே. ஏன் வலிய பற்று ஏற்படுத்தவேண்டும்? நான் ஏன் இங்கு இருக்கிறேன் என எனக்குத் தெரியாது. ஆனால் இறைவனுக்குத் தெரியும். நான் அவனுக்காக உழைப்பேன். நான் எனது சொந்த விருப்பத்தைப் பின்பற்ற முயலமாட்டேன். ஆனால், நான் என்ன செய்யவேண்டும் என்று இறைவன் விரும்புகிறானோ அதைச் செய்வேன்," எனக் கூறுகிறார். நீங்கள் இந்த உலகைப் படைக்கவில்லை. இறைவன் படைத்தான். நீங்கள் இந்த உலகில் வாழ்வது உங்களையே மகிழ்வித்துக்கொள்ள மட்டுமே என ஏன் எண்ண வேண்டும்? தனக்காக வாழ்வதே எல்லாத் துன்பங்களுக்கும் மூல காரணம். பற்றற்ற நிலை பெரும் அக சுதந்திரத்தையும் மகிழ்ச்சியையும் தருகிறது.

## தகரும் உலகுகளில் அழிவின் ஊடே நிலை குலையாமல் நில்லுங்கள்.

குருதேவர் அருளுகிறார்: "உலகம் அதன் சரித்திரம் முழுவதிலும் அவ்வப்போது ஒரு பெரிய குழப்பத்தில் சிக்கி இருந்திருக்கின்றது. போர்க்காலங் களில் அது கோடிக்கணக்கான மனிதர்களுக்கு ஒரு சித்தரவதைக்

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

கூடமாகின்றது. உண்மையான இன்பம், நீடித்த இன்பம் இறைவனிடம் மட்டுமே இருக்கின்றது. “அவனைப் பெற்றிருந்தால் வேறு எந்தப் பேறும் பெரிய பேறு இல்லை” என்று பகவத் கீதையில் பகவான் கூறியுள்ளார். அவனிடம்தான் ஒரே ஒரு பாதுகாப்பு, ஒரே ஒரு புகலிடம் மற்றும் நமது அனைத்து அச்சங்களிலிருந்தும் ஒரே ஒரு விடுதலை.

உங்களுக்கு இவ்வுலகில் வேறு எந்தப் பாதுகாப்பும் இல்லை. வேறு எந்த சுதந்திரமும் இல்லை. ஒரே உண்மையான சுதந்திரம் இறைவனிடம் உள்ளது. எனவே, காலை மற்றும் இரவு தியானத்திலும், அத்துடன் நாள் முழுவதும் நீங்கள் ஆற்றும் எல்லாப் பணி மற்றும் கடமைகளிலும் அவனுடன் தொடர்பு கொள்ள ஆழமாக முயற்சி செய்யுங்கள். இறைவன் இருக்குமிடத்தில் பயமில்லை, துயரமில்லை என்று யோகம் போதிக்கின்றது. வெற்றி கண்ட யோகியால் தகர்ந்து கொண்டிருக்கும் உலகங்களின் பேரொலியின் நடுவில் நிலைகுலையாமல் நிற்க முடியும்; ” இறைவா நான் எங்கு இருக்கின்றேனோ, அங்கே நீ வர வேண்டும்” என்ற ஞான உணர்வில் அவர் பாதுகாப்பாக இருக்கின்றார்.

இவ்வுலகில் எல்லாத் துன்பங்களும், நரகத்தின் வேதனைகள் கூட உங்களைப் பாதிக்க முடியாதபோது, நீங்கள் ஓர் அரசன் ஆவீர். மேலும் நீங்கள் அதுபோன்றுதான் இருக்க வேண்டும். நீங்கள் இந்தப் பலவீனமான மனித உடலின் தடைகளை உடைத்து அழியாத்தன்மையை வெளிபடுத்த வேண்டும். மிக உயர்ந்த மகான் ஸ்வாமி ராமதீர்த்தர் தனது ’முன்னேறும் ஒளி’ என்ற கவிதையில் ”என் தேருடன் கட்டுவேன். விதிகளையும், தேவர்களையும் இடியின் குரலில் உலகிற்கு பறை சாற்றுவேன்! விடுதலை! விடுதலை!

ஓம் ! ஒ, கடலே! வறண்டு போய் விடு” என்று எழுதினார். அதாவது உங்களது ஆத்மாவின் முன்னேறும் ஒளியின் முன்பு சமுத்திரம் வற்றிவிடும். மேலும் மலைகள் ஒதுங்கி நிற்கும். ” ஜாக்கிரதை, மலைகளே! என் வழியில் நிற்காதீர் / உம் விலா எலும்பு உடைந்து இன்று சிதறடிக்கப்படும்! ”அதைப்பற்றி நினைத்துப்பார்க்கவும். ஆன்மாவின் விடுதலை மட்டுமே அனைத்தையும் வெற்றி கொள்ளவல்லது. அத்துடன் அது அனைத்தையும் திருப்திப்படுத்த வல்லது. எப்போதும் புதிதாக ஆனந்தமயமானது.”

எந்த ஒரு திவ்ய ஞானத்தை ஒரு மனிதன் பெறுகிறானோ அவனுக்கு மற்ற எந்தப் பொருளும் தேவையற்றதாகி விடுகிறது. அவன் பரிபூர்ண திருப்தி அடைகிறான்; எல்லா துன்பங்களையும் மறக்கிறான். என்ன நடந்தாலும் அவனுக்கு அவற்றில் எந்த வித சம்பந்தமுமில்லாதாகிவிடுகிறது, அப்படிப்பட்ட ஒருவனின் கட்டளைக்கு இந்த உலகமும் உலகப்பொருட்களும் அடிபணியத்தான் வேண்டும். அப்பொழுது அனைத்திற்கும் மேலாக இறைவன் மட்டும்தான் இருப்பான். இந்த நிலைதான் இறைவனுடன் இணைந்துள்ள ஒரு மனிதனுடைய நிலை. இதைத்தான் அனைவரும் பெற வேண்டும். (பகவத் கீதை அத் 6 ஸ்லோகம் 22)

குருதேவர் கூறுவதும் அதுவே. முயற்சி எல்லாப் பலன்களையும் கொடுக்கும். அதற்கு இறைவனின் பேரன்பு மனிதனின் பேராவலைத் தூண்டி விட்டுத் துணை புரியும். இவ்வாறு முயற்சி செய்பவர்கள் இறைபேறு பெறுவர். அதுதான் வாழ்வின் முடிவு; சம்சார வாழ்வு அல்லது மனித வாழ்வு அல்லது பிறப்பு இறப்பு அத்துடன் நிறைவு பெறுகிறது.

ஜெய் குரு

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909







# அவசியம் தவிர்க்க வேண்டிய பிரிட்ஜ்

பிரிட்ஜில் உணவு பொருட்களை வைப்பதன் மூலம் கெடாது என்பது மூட நம்பிக்கையே?

ஒரு சிறிய சோதனை வெள்ளரிக்காய் ஒன்றை எடுத்து பிரிட்ஜில் வையுங்கள்

ஒரு மண் குடுவையை நீரில் நனைத்து அவற்றில் ஒரு வெள்ளரிக்காய் வைத்து ஐந்து நாள் கழித்து இரண்டையும் ஒப்பிடுகையில்.

பிரிட்ஜில் வைத்த காய் சுருங்கிபோய் சில்லென்று இருக்கும்

குடுவையில் உள்ள காய் வைத்த அன்று எப்படி இருந்தனவோ அதே போல் இருக்கும்.

பிரிட்ஜில் வைக்கும் கீரைகள் காய்கறிகள் டெம்பர் கூடும்போது குறையும்போதும் வீரியம் இழக்கிறது.

அதாவது சத்துக்களின் சாராம்சம் வெளியேறுகிறது. மேலும், சாம்பார் பிரிட்ஜில் வைத்தால் கெட்டு போகாது.

உண்மை ஆனால் சாம்பார் சுவை உறிஞ்சபட்டு இருக்கும் பிரிட்ஜ் திருடி தின்கின்றன சத்தை.

பிரிட்ஜில் உள்ள உணவுகளில் சுவையின்மையை நுணுக்கமாக கவனித்தால் உணரலாம்.

இவ்வாறு சின்ன சின்ன நுட்பமான அம்சங்களை கவனிக்காமல் சக்தியிழந்த உணவை உண்ணும் நாம். உடல் நோய்வாய் படுவது தவிர்க்க இயலாமல் போய்விடுகிறது

பிரிட்ஜால் ஜீவசத்துக்கள் இழந்த உணவு உடலுக்குள் போகும் போது இரட்டை சிக்கல் உருவாகிறது.

1. உணவுக்காக காத்திருந்த உடல் தனக்கான சத்துக்கள் இன்றி ஏமாற்றம் அடைகிறது
2. இந்த குப்பைகளை அரைத்து சேமித்து வெளிதள்ள வேண்டிய மகத்தான பணியை எந்த கூலியும் இன்றி நிறைவேற்ற வேண்டியுள்ளது.

இவை தொடர்ந்து நடைபெறும்போது ஆயுள் சந்தா நோய்களான நீரழிவு, ரத்த அழுத்தம், மற்றும் இதய நோய்கள் போன்றவை தவிர்க்க இயலாதவை. உடலுக்கு கூலி என்பது சத்துக்களே அவை இல்லையெனில் நோய்.



# நவீன காலத்து அரக்கர்கள்
# சபரிமலைக்கு போராடும் அனைவரும் தேவர்களே




பழுத்த மரத்தில் கண்டிப்பாக கல் அடி இருக்கும். இந்த வகையில்தான் இந்து மதத்திற்கு எதிராக பல்வேறு காலக்கட்டங்களில், பல்வேறு விதமான சிறு கற்கள் என்ற எதிரிக் கூட்டம் உருவாகி, கடைசியில் உருவான இடம் தெரியாமல் அழிந்தும் போய்விடுகிறது.

இச்சம்பவம் புராண காலம் தொட்டே நடை பெற்று வருகிறது. நல்ல சக்திகளை தேவர்கள் என்றும், தீய சக்திகளை அசுரர்கள் என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது.

கிருதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் போன்ற யுகங்களில் இந்துக்களுக்கு எதிராக, “நான்தான் கடவுள்” என்ற கோட்பாட்டுடன் அரக்க சக்தி மட்டுமே உலாவி வந்தது. ஆனால் தற்போதைய யுகமான கலியுகத்தில் விஞ்ஞானம், நாகரீகம், மற்றும் இந்துமதக் கொள்கையை ஆணிவேராகக் கொண்ட பிறமதங்கள், கடவுள் மறுப்பு கொள்கைக்காரர்கள் போன்றோர். இந்த அரக்க ரூபத்தைக் கொண்டு இந்து மதத்தை எதிர்க்க விழைந்துள்ளனர்.

இந்த நிலை தற்போது இந்தியாவில் வேக மாக பரவுகிறது. இதில் தற்போது மிகவும் குறிப்பிட்டு சொல்ல வேண்டுமானால் சபரிமலை பிரச்சனை...

இப்பிரச்சனையை ஆராய்வதற்கு முன் ஜப் பானில் நடைபெறும் ஒரு சம்பத்தை பார்ப்போம்.

ஜப்பான் நாட்டில் ஒகினொஷிமா தீவு ஒன்று உள்ளது. இங்கு உள்ள கோவிலில் ஷிண்டோ பூஜாரி மட்டுமே. வருடத்தில் 2மனி நேரம், அதுவும் 200 ஆண்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர்.. ஒரு பெண் கூட உள்ளே செல்ல முடியாது.

இதற்க்கு unesco நிறுவனம் உலக பாரம் பரிய அங்கீகாரம் கொடுத்து உள்ளது.

அதுபோன்று உலகில் பல்வேறு மசூதிகளில் பெண்கள் நுழைவதை தடை செய்துள்ளனர்.

தற்போது விஷயத்திற்கு வருவோம்.

இதுபோல பெண்களை தடை செய்துள்ள கோயில்கள் பல உலகில் உள்ளது.

இந்த வகையில் சபரிமலை ஐயப்பன் சன்னதி ஒருவிதசக்தி வாய்ந்த தலமாகும், இத்தலத்தில் பெண்களை முற்றிலும் தவிர்க்கவில்லை, குறிப் பிட்ட வயது பெண்களை மட்டுமே தடை செய்யப் பட்டுள்ளது.

இந்து மதத்தைச் சேர்ந்த அனைத்து பெண்களும் இதை ஏற்று ஐயப்பனின் பக்தர்களாகவே உள்ளனர்.

ஆனால் இந்து மத சம்பிரதாயத்தை சீரழிக்கவும், பாரம்பரியத்தை அழிக்க வேண்டும் என்றும் நினைக்கும் ஒரு கூட்டம் இந்து சமயத்திற்கு எதிராக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, சபரிமலை தீர்ப்பை வழங்கிய ஐந்து நீதிபதிகளில் இருந்த ஒரே பெண் நீதிபதி கூட சபரிமலைக்கு எதிரான தீர்ப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தார். ஆனால் ஆண் நீதிபதிகள் ஏன் தேவையில்லாமல் மத சம்பந்தமான விஷயத்தில் முரண்பட்டனர் என்பது அந்த ஐயப்பனுக்கே வெளிச்சம்.

ஆனாலும் இந்த தீர்ப்பு இந்து மதத்திற்கு எதிரான தீர்ப்பு என்பதை தெரிந்தும், கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த, முதல்வராக இருக்கும் பினரயி விஜயன் விடாப்பிடியாக வீம்பாக பெண்களை வலு கட்டாயமாக சபரிமலைக்கு அழைத்துச் செல்ல பாடுபடுவது வேதனைதான்.

ஏற்கனவே இஸ்லாமிய மதப் பெண்ணை சபரிமலைக்கு, பல ஆயிரம் காவலர்கள் துணையுடன் மலையேற்ற அனுமதி வழங்கி, ஐயப்ப பக்தர்களின் தீவிர எதிர்ப்பால் திருப்பி அனுப்பப்பட்டார்.

கேரளாவில் எத்தனையோ பிரச்சனைகள், சட்ட ஒழுங்கு பிரச்சனைகள், போன்றவை நிலவி, மக்கள் அமைதி இழந்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் பல தலையாய பிரச்சனைகள் இருக்கும்போது. அதை சரிசெய்ய நேரம் ஒதுக்காமல், இந்து மதத்தைச் சிதைக்க மெனக்கெடுவது ஏன்? என்பது தெரியவில்லை.

இதற்கு மாற்று மதத்தினர் துணை நிற்பது வேதனையிலும் வேதனை, வெள்ளைக் காரர்களை முழுமையாக நம்பிய மக்களை அந்த கொள்ளைக்கார வெள்ளைக்காரன் அடிமைப்படுத்தியதை போன்று, சகோதர பாசத்துடன் பழகிய மாற்று மதத்தினர் தற்போது வெளிப்படையாக இந்து மதத்திற்கு எதிராக களம் இறங்கியுள்ளது இந்துக்களின் முதுகில் குத்தும் செயல்.

ஆடையில் கூட பெண்களுக்கு விடுதலை கொடுக்காமல் இருக்கும் மதத்தைச் சேர்ந்தவர்கள், தற்போது பெண் சுதந்திரம் என்ற பெயரில் சபரிமலைக்கு எதிராக களம் இறங்குவது சகோதர எண்ணத்தைத் தவிடுபொடியாக்குகிறது.

இந்தியாவில் எழுத எத்தனையோ பிரச்சனைகள் இருக்க, ஒரு சில ஊடகங்கள், இந்து மதத்திற்கும், இந்து தலைவர்களுக்கும் மட்டுமே எதிரான செய்தி வெளியிட்டுவருவது வெட்கக் கேடான செய்திகளாக உள்ளது.

இதற்கெல்லாம் முட்டு கொடுப்பது போன்று வெளிநாட்டு பத்திரிக்கையான பி.பி.சி., கூட இந்து மதத்தை அழிக்கும் பணியில் தங்களை முழுவதுமாக ஈடுபட்டு இந்திய மொழிகளில் தவறான செய்தியை வெளியிட்டு வருகிறது.

கேரளாவில் இந்த செய்தி சேனலைச் சேர்ந்த மதத்தவர்கள் செய்த (பல பெண்கள் கற்பை சூறையாடிய மத போதகர்களின்) அட்டுழியங்களை தோலுறித்து காட்டவில்லை, தமிழகத்தில் வயதானவர்களை கொன்று அவர்களின் உடல் எலும்பை பொடியாக்கி கடத்திய செய்தியை வெளியிடவில்லை. ஆனால் இந்து மதத்திற்கு எதிரான செய்தி என்றவுடன் அல்வாவை சாப்பிட்டதைப்போன்று விழித்துக் கொண்டு செயல்படுவது வேதனைதான்.

இந்து மதம் இதுவரை பல்வேறு பிரச்சனைகளை சந்தித்துள்ளது. அந்த வகையில் தற்போது இந்து மதக் கொள்கைகளை சீரழிக்கும் எண்ணம் கொண்ட ஒருசிலரால் அது தற்போது நடைபெற்று வருகிறது.

கலியுகத்தில் இதுபோன்ற சம்பவம்நடைபெறும் என்று வேத காலத்திலேயே நமது முன்னோர் வகுத்து கூறியுள்ளனர்.

எக்காலத்திலும் இந்துமதக் கொள்கையையும் இந்து பாரம்பரியத்தையும் கடைப்பிடித்து வந்த தேவர்களுக்கும், இதற்கு எதிராக செயல்பட்டுவந்த அசுரர்களுக்கும் தொன்று தொட்டே நடைபெற்று வந்ததைப் போன்ற நவீன காலத்து சண்டைதான் தற்போது நடைபெற்று வருகிறது. ஆனால் இறுதியில் நன்மையின் பக்கம் இருக்கும் தேவர்களே வெல்வார்கள்.

தற்போது தேவர்களாக செயல்பட்டு, இந்து மதத்திற்கு ஆதரவாக போராடும் அனைத்து இந்து மதக் கொள்கை கொண்ட தேவர்களுக்கும் கண்டிப்பாக வெற்றி கிடைக்கும்.

ஐயனின் பொறுமைக்கும் எல்லை உண்டு. சாதுமிரண்டால் காடு கொள்ளாது. அவசியம் நம் மதத்திற்கும் பாரிம்பரியத்திற்கும் எதிராக செயல்படும் அரக்கக் கூட்டத்தை ஐயப்பன் வேறொடு அழிப்பார்.

# சிவாலயம் எழுப்பினால் ஏற்படும் மேன்மைகள்



சிவாலயம் எழுப்புவதால் ஒருவன் பெறக்கூடிய மேன்மையை பற்றிச் சூத முனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்கு கூறலானார்.

- ❖ சிவாலயம் எழுப்புபவன் தினமும் பெருமானை வழிபாடு செய்தால் உண்டாகும் சிறப்பை அடைகிறான்.
- ❖ அவன் குலத்தில் வாழ்ந்த நூறு தலைமுறையினர் சிவலோகம் செல்வர்.
- ❖ சிவாலயம் எழுப்ப வேண்டும் என்று மனதால் நினைத்தாலே ஏழு பிறவிகளில் செய்த பாலங்களில் இருந்து விடுபடுவான்.
- ❖ ஆலயம் கட்டி முடித்தால் அதில் உள்ள கற்க்கள் ஒவ்வொன்றிர்க்கும் ஒவ்வோரு ஆயிரம் ஆண்டுகள் சிவ லோகத்தில் இருக்கும் வேறு பெறுவர்.
- ❖ சிவலிங்கத்தை உருவாக்குபவர் சிவலோகத்தில் அறுபதினாயிரம் ஆண்டுகள் இருப்பார். அவனது தோன்றல்களும் சிவலோகத்தை அடையும் புன்னியம் பெருவர்.
- ❖ சிவாலயத் தொண்டுகளில் ஈடுபடு வோரை எமன் நெருங்கக் கூடா தென்று சிவ பெருமான் எச்சரித்து உள்ளார். அவர்கள் தலைமுறையினரைக் கூட எமதூதர்கள் நெருங்க மாட்டார்கள்.
- ❖ சிவாலயத்தில் உரிய பொருள்களால் அபிஷேகம் செய்து வழி படுபவன் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த பலனைப் பெறுவான்.
- ❖ கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் சிவ லிங்கத்துக்கு சிவ லிங்கத்துக்கு நெய் அபிஷேகம் செய்தால் சர்வ பாவங்களும் விலகும்.
- ❖ பௌர்ணமி, அம்மாவாசைகளிலும் சிவ லிங்கத்திற்க்கு அபிஷேக, ஆராதனைகள் செய்வோர்க்கும் அத்தகைய பலனே கிடைக்கும்.
- ❖ பிரதோஷ காலங்களில் நெய்யபிஷேகம் செய்தால் அது தெரிந்தோ,தெரியாமலோ செய்த பாவங்களை நீர்மூலமாக்கும்.
- ❖ பசும்பாலால் அபிஷேகம் செய்தால் சிவலோகமடைந்து என்றும் மகிழ்சியாக இருப்பார்.
- ❖ நவக்கிரகங்களும் அவனுக்கு அருள் புரியும்.
- ❖ மலர்களுக்குப் பதில் பிருங்கராச பத்திரம், அருகம்புல் போன்றவற்றால் அர்ச்சனை செய்யலாம்.



ஆன்மிக அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க

Aanmeega malar (mobile app)
புத்தம் புதிய பொலிவுடன்

வழிபாட்டுத் தலங்களைப் பற்றி குறிப்புகள்
YouTube
அற்புத வண்ணமயமான ஆன்றோர் தத்துவங்கள்
பலன், பரிகாரம், ஜோதிடப் பலன்கள்
போன்ற புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளது

காணும் பொங்கல் தினத்திலிருந்து புதிய வடிவில் வெளிவரவிருக்கிறது
இ-புத்தகம், ஆன்மிக செய்திகளையும் இலவசமாக தரும் ஒரே ஆன்மிக தளம்
GET IT ON Google Play டவுன்லோடு செய்து பயன்பெறுங்கள்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033



# திணிக்கப்பட்ட கருத்து

பருத்தி ஆடைகள் இல்லாமல் நம்மால் இருக்க முடியுமா? இருக்கவே முடியாது. 18ம் நூற்றாண்டில் பிரும்மேந்திரர்(அது போல) இருந்தார். அதனால், கண்ணுக்குத் தெரியவில்லை; நிழலாகத் தெரிந்து கொண்டு இருந்தார் இல்லையா? பருத்தி நூலை நாம் ஆதரிக்கிறோம், அதை நம்மால் சாப்பிட முடியாது.

பருத்தி நூலையும் சாப்பிட முடியாது; பருத்தியையும், பருத்திக் கொட்டையையும் சாப்பிட முடியாது. அதனுடைய காயையும்/இலையையும் சமைத்துச் சாப்பிட முடியாது. இது ஒரு விதத்திலும் உபயோகம் கிடையாது என்றாலும் கூட, இது ஒரு அற்புதமான கருத்து. பருத்தி சமுதாயத்திற்குள் திணிக்கப்பட்ட கருத்து. இன்று வரைக்கும், யாராலும் , ஆடையே இல்லாமல் சாலையில் போக முடியாது: 24 மணி நேரம் இருக்க முடியாது. அதனால், ஒப்புக் கொள்கிறோம்.

சுவாமியை/பகவானை/கடவுளை எல்லோரும் ஏன் ஒப்புக் கொள்கிறார்கள்? கடவுள் என்பவன் சமுதாயத்திற்குள் திணிக்கப்பட்ட கருத்து.. அதனால் தான் ஒப்புக் கொள்கிறார்கள். அது ஒரு தேவையான கருத்து என்பதால், அதை சிலர் ஆராய்ச்சி/சர்ச்சை செய்கிறார்கள்.

இது போலத்தான் மெய்யன்பர்களே! கடவுள் என்பது இறைவன் / பகவான் என்று சொல்லி, திணிக்கப்பட்ட கருத்தாக இருந்தால், கடவுளை நாங்கள் அனைவரும் இங்கு உட்கார்ந்து, இப்படி சிந்தித்தோம் என்று எண்ணிக் கொள்ளுங்கள். அவன் முற்றிலும் உபயோகப்பட்ட கருத்து என்று சொன்னாலும், போன வாரம் நாங்கள் கடவுளை இந்த வண்ணம் பேசி அனுபவித்தோம் என்று எண்ணிக் கொள்ளுங்கள்.

நான் போட்டிருக்கிற சட்டைக்கு என்ன பெருமை இருக்கிறது? அது எனக்குத் தேவை; அதனால் போட்டுக் கொள்கிறேன். இந்த 'தேவை' என்கிற இடத்தில் உரையை முடிப்பதற்குத்தான் என்னை சுவாமி இழுத்துக் கொண்டு வந்தார். அதனால் தான், தேவை என்கிற கருத்தை "திணிக்கப்பட்ட கருத்து" என்று சொன்னார் பிரும்மேந்திரர்.

பகவான் தேவையா இந்த பூலோகத்திற்கு? இப்போது, மறந்து போய்விட்டார்கள் ஜனங்கள். நாம் யாருமே கடவுளை மறக்கவில்லை என்றால் சந்தோஷம் தான்: நாம் அத்தனை பேரும் மகான் தான். சுவாமியை அனுபவித்தவர்கள் என்று அர்த்தம்; அனுபவித்துக் கொண்டே இருக்கிறவர்கள் என்று அர்த்தம். எதிலுமே ஒன்றும் குற்றமேயில்லை என்று நினைத்துக் கொள்ள வேண்டும்.



ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு
சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது
மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

## கேள்வி - பதில்

**சீடன்:** ஞானிகளும் மகான்களும் ஒரே எண்ணம் உள்ளவர்களாக இருந்தாலும் வழி மாறுகிறதே?

**ஞானி:** எல்லா நூற்றாண்டிற்கும் ஒரே வழி, ஒரே கருத்து தேவைப்படாது.

**சீடன்:** ஞானம் என்றால் கடவுள் ஞானம் தானா?

**ஞானி:** எண்ணெய் வித்து என்றால் அது எல்லா எண்ணையையும் குறிப்பது போல், ஞானம் என்றால் கடவுள், பௌதீகம், கணிதம், லௌகீகம் எல்லாவற்றையும் குறிக்கும்.

**சீடன்:** ஞானம் வந்ததும் வாழ்க்கை எப்படி மாறும்?

**ஞானி:** உலக விஷயத்தை எடுத்துக் கொண்டாலே அத்தியாவசியமான நியாயம் எது, அநாவசியமான நியாயங்கள் சில சமயம் அத்தியாவசியமான கருத்துக்களாகக் கூட இருக்கும், ஞானம் உள்ளவன் இந்த நிலைகளிலெல்லாம் தெளிவாக இருப்பான்.

**சீடன்:** எது தர்மம்?

**ஞானி:** அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்வது அனைத்தும் தர்மம். இது எல்லோருக்கும் பொருந்துவதாலும் தர்மம்.

**சீடன்:** தர்மவான் யார்?

**ஞானி:** தர்மத்தை உணர்ந்தவன். அனைவருக்கும் தர்மம் வேண்டும் என்று எண்ணுபவன். செயலில் இறங்கும் போது தர்மவான்.

**சீடன்:** நிறைவு என்றால் என்ன?

**ஞானி:** நம்மை நாம் முடிவு செய்து கொண்டால் கிடைக்கும் உணர்வு.

**சீடன்:** கடவுளின் சாம்ராஜ்யத்தில் சிறப்பு என்ன?

**ஞானி:** கடவுளின் பக்தி சாம்ராஜ்யத்தில் இரண்டு அரசர்கள். அரசனான கடவுள் பக்தனை யும், அரசனாக்கி விட்டு தன்னை பிரஜை யாக்கிக் கொண்டு மந்திரியாக உதவவும் செய்கிறான்.

# ஆயுர்வேத ரகசியங்கள்

நோய்களே இல்லாமல் ஆரோக்கியமாக இருப்பவர்களின் எண்ணிக்கை தற்போது மிக வேகமாக குறைந்து வருவது வருத்தப்படவேண்டிய விஷயம்.

நேரம் இன்மை இதற்கு முக்கிய காரணம், நேரத்தை குறைந்த அளவில் எடுக்கும், சில எளிய வீட்டு வைத்தியங்கள் நிறையவே உள்ளன. அவை நம் ஆரோக்கியத்தின் கவசமாகும். அவற்றைத் தெரிந்து கொண்டால், நோய் வரும் முன் நம்மைக் காத்துக்கொள்ளலாம். அதாவது, ரத்தம் சுத்தமில்லாமல் இருப்பது, அதைத் தொடர்ந்து உள்ளுறுப்புகள் பாதிப்பதே நோயாக வந்து நம்மைத் துன்புறுத்துகிறது. ஆகவே, நோய் வரும் வாய்ப்பையே தடுத்துவிட்டால் ஆரோக்கியம் எப்போதும் நம் வசமே. அன்றாடம் பயன்படுத்தும் இயற்கை விளைப்பொருட்களின் மூலம் நம் உடலின் உறுப்புகளைப் பலப்படுத்தும் வழிமுறைகளைப் பற்றிப் பார்க்கலாம்.

## மூளை



கறிவேப்பிலைத் துவையலை 48 நாள்கள் சாப்பிட்டு வந்தால் மூளையின் செயல்பாடு சீராகி, நாம் சுறுசுறுப்புடன் இருப்போம்.தாமரைப்பூவை நீர் விட்டு காய்ச்சி தினசரி மூன்று வேளையும் ஒரு டம்ளர் அளவுக்கு குடித்து வந்தால் மூளையின் செயல்பாடு மேம்படும். இதை 48 நாள் களுக்குக் குடித்து வரலாம்.

குறைந்தது ஆண்டுக்கு இருமுறையாவது கைகளில் மருதாணி வைத்தால், மனம் தொடர்பான கோளாறுகள் நீங்கும். அதன் குளிர்ச்சி மூளைக்கு ஓய்வைத் தரும்.

வல்லாரை இலைகளை நெய்யில் வதக்கி சுடுசாதத்துடன் இரண்டு கவளம் சாப்பிட்டு வர வேண்டும்.

தினசரி இரண்டு துண்டு தேங்காயை மென்று தின்பதால் மூளையில் எந்தப் புண்களும் வராது.

இலந்தைப் பழத்துடன் கருப்பட்டிச் சேர்த்து அரைத்துக் குடித்தால் பதற்றத்தைக் குறைக்க முடியும். மூளையின் நரம்புகள் வலுப்பெறும்.

பெருவிரலும் ஆள்காட்டி விரலும் இணைத்து வைத்திருக்கும் சின் முத்திரையை, தினமும் 20 நிமிடங்கள் செய்தால் மூளையின் செல்கள் புத்துயிர் பெறும். நினைவுத்திறன் மேம்படும்.

## கண்கள்



பாலுடன் குங்குமப்பூ சேர்த்துக் குடித்து வருவது நல்லது.

தினமும் 50 கிராம் அளவுக்கு மாம்பழம் அல்லது பப்பாளியைச் சாப்பிட்டு வர பார்வைத்திறன் மேம்படும்.

அரைக்கீரையை வாரம் இருமுறை சாப்பிட்டு வந்தால் கண்கள் குளிர்ச்சியடையும். அதுபோல் பொன்னாங்கண்ணி, முருங்கைக் கீரைச் சாப்பிட்டாலும் பார்வைத்திறன் மேம்படும்.

வெண்டைக்காய் மோர்க்குழம்பு, வெண்டை மசாலா, வெண்டைக்காய் பொரியல் என சாப்பிட கண்களுக்கு நல்லது.

தினந்தோறும் நெல்லிக்காய் ஜூஸ் குடித்து வந்தால், கண் தொடர்பான பிரச்னைகள் வராது. தினமும் 5 பாதாம்களை சாப்பிட்டு வரவேண்டும்.

## பற்கள்

மாவிலைப் பொடியை பற்பொடியாகப் பயன்படுத்தி பல் தேய்த்து வந்தால் பற்கள் உறுதியாகும்.

கோவைப்பழம் சாப்பிட்டால் பல் தொந்தரவுகள் வராது. உணவிலும் அடிக்கடி கோவைக்காயைச் சேர்த்துக் கொள்ளலாம்.



செவ்வாழைப் பழத்தை தினமும் இரவில் சாப்பிட்டு வர பல்லில் ரத்தக்கசிவு, பல் சொத்தை ஆகியவை வராது.

பல் உறுதியாக, உணவை நன்றாக மென்று சுவைக்க வேண்டும். கேரட், கரும்பு, ஆப்பிள் போன்றவற்றைப் பத்து முறையாவது நன்றாக மென்று சாப்பிட வேண்டும்.

## நரம்புகள்

சேப்பங்கிழங்கை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொண்டால் நரம்புகள் பலம் பெறும்.



இரண்டு அத்திப் பழத்தை தினந்தோறும் சாப்பிட்டு வரலாம்.

மாதுளைப் பழச்சாறில் தேன் கலந்து 48 நாள்கள் குடித்து வரலாம்.

இலந்தைப் பழத்தை அவ்வப்போது சுவைத்து வரலாம்.

கரிசலாங்கண்ணிக் கீரையை அடிக்கடி சாப்பிட்டு வருவது நல்லது.

## ரத்தம்



வாரம் இரண்டு நாள்கள் பீட்ரூட் ஜூஸ் குடிப்பதால் ரத்தம் உற்பத்தியாகும்.

திராட்சைப் பழ ஜூஸ் ஒரு டம்ளர் அல்லது ஒரு ஸ்பூன் இஞ்சிச் சாற்றில் சிறிது தேன் கலந்து குடித்து வந்தால் ரத்தம் சுத்திகரிக்கப்படும்.

தினம் ஒரு கப் அளவுக்கு தயிர் சாப்பிட்டு வந்தால், ரத்தக் குழாய் அடைப்புகள் நீங்கும்.

அடிக்கடி விளாம்பழம் சாப்பிட்டு வந்தால், ரத்தத்தில் உள்ள கிருமிகள் அழியும்.

இரண்டு லிட்டர் நீரைக் கொதிக்க வைத்து, அதில் சீரகத்தைப் போட்டு 10 மணி நேரம் கழித்து, அந்தத் தண்ணீரை நாள் முழுவதும் குடித்து வந்தால் ரத்தம் சுத்தமாகும்.

நாவல் பழம், இலந்தைப் பழம்ஆகியவற்றை சீசன் நேரத்தில் தவறாமல் சாப்பிட வேண்டும்.

## சருமம்

தேகம் பளபளப்பாக மாற ஆவாரம் பூ டீ குடித்து வரலாம். ஆரஞ்சுப் பழத்தையும் சாப்பிட்டு வரலாம்.



முட்டைக்கோஸ் சாற்றை முகத்தில் தடவி வர முகத்தில் ஏற்படும் சுருக்கங்கள் மறையும்.

சந்தனக் கட்டையை இழைத்து அதனுடன் எலுமிச்சைச் சாறு கலந்து முகத்தில் பூசினால் பருக்கள் நீங்கும். முகம் பிரகாசமாகும்.

ஆரோக்கியமான உடல், பொலிவான முகம், பளபளப்பான சருமம் பெற அறுகம்புல்லை நீர் விட்டு அரைத்து, வெல்லம் சேர்த்து வாரம் மூன்று முறைக் குடித்து வரவேண்டும்.

எந்தவித தோல் நோய்களும் அண்டாமல் இருக்க, வெள்ளரிக்காய், மஞ்சள், வேப்பம்பு சேர்த்து அரைத்து, உடலில் பூசிக் குளித்து வந்தால் சருமம் மின்னும்.

## நுரையீரல் இதயம்

தேனில் ஊறவைத்த நெல்லிக்காயை தினசரி சாப்பிட்டு வர நுரையீரல், இதயம் பலமாகும்.



கரிசலாங்கண்ணிக் கீரையை வாரம் இருமுறை சாப்பிட்டு வந்தால் நல்லது.

ஆர்கானிக் ரோஜாப்பூ, பனங்கற்கண்டு,


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

**ஈரோடு அருகே வெண்ணைமலை உள்ளது. அங்கு முருகன் யார் துணையும் இல்லாமல் தன்னந் தனியாகத் தண்டாயுதபாணியாகக் காட்சி அளிக்கிறார். வெண்ணெய் மலையை வலம் வருபவர்கள் கயிலையை வலம் வந்த பலனைப் பெறுவார்கள்.**

தேன் ஆகியவற்றை லேகியம் போல கலந்து, தினமும் ஒரு ஸ்பூன் சாப்பிட்டு வர இதயம் பலமாகும்.

இஞ்சி முரப்பா, இஞ்ச்ச் சாறு, இஞ்சித் துவையல் ஆகியவற்றைச் சாப்பிட்டால் இதயம் ஆரோக்கியமாக துடித்துக் கொண்டிருக்கும்.

முசுமுசுக்கை இலையை பொடியாக்கி மாதம் இருமுறை சாப்பிட்டு வந்தால் நுரையீரல் புற்று நோய் வராது.

சுண்டை வற்றலை உணவில் அடிக்கடி சேர்த் துக்கொண்டால் நுரையீரல் ஆரோக்கியத்துடன் இருக்கும்.

திராட்சை ஜூஸ், உலர் திராட்சையை சாப்பிட இதயம் பலம் பெறும்.

முள்ளங்கிச் சாற்றை அரை கப் அளவுக்கு மூன்று வாரங்களுக்கு குடித்து வருவது நல்லது. இதனால், நுரையீரல் தொடர்பான பிரச்னைகள் நெருங்காது.

ஆளிவிதைகள், பாதாம், வால்நட் ஆகிய வற்றில் ஒமேகா 3, நல்ல கொழுப்பு இருப்பதால் இதயத்துக்கு நல்லது.

## வயிறு

காலையில் எழுந்ததும் ஊறவைத்த ஒரு டீஸ்பூன் வெந்தயத்தை சாப்பிட்டு சிறிதளவு தயிரையும் குடிக்க வேண்டும். வயிறு சுத்தமாகும்.

மாதுளம்பூவை தேநீராக்கிக் குடித்து வந்தால், வயிறு தொடர்பான பிரச்னைகள் நீங்கும்.

கொன்றை பூ கஷாயம், புதினா துவையல் ஆகியவை வயிற்று வலியை தீர்க்கும் சிறந்த மூலிகைகள்.

வறுத்துப் பொடித்த சீரகத்தை ஒரு டம்ளர் மோரில் போட்டுக் குடிக்க வேண்டும்.*

வாரத்தில் இரண்டு நாள்கள் ஒரு டம்ளர் தேங்காய்ப்பாலுடன் கருப்பட்டி சேர்த்துக் குடித்து வருவதால், வயிறு தொடர்பான பிரச்னைகள்



எதுவும் வராது.

சுரைக்காயை வாரம் இருமுறை உணவில் சேர்த்துக்கொள்ள தொப்பை கரையும்.

வாழைப்பூ, மணத்தக்காளிக் கீரையை வாரம் ஒருமுறையாவது சாப்பிட வயிற்றுத் தொந்தரவுகள் நீங்கும்.

வாரம் ஒருமுறை கொள்ளு ரசம் சாப்பிடக் கெட்டக் கொழுப்பு கரையும். தொப்பையும் குறையும்.

## கணையம்

பாகற்காய், அவரைப்பிஞ்சு, நாவல்பழம் ஆகியவற்றை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் கணையத்தின் செயல்பாடு சீராக இருக்கும்.

தினசரி 5 ஆவாரம் பூவை மென்று தின்ன வேண்டும்.

கொன்றைப் பூவை அரைத்து மோரில் கலந்து குடித்து வந்தால் கணையத்தின் செயல்பாடுகள் சீராகும்.

கோவைப்பழத்தை அடிக்கடி சாப்பிட்டு வருவது நல்லது.

## கல்லீரல் மண்ணீரல்

சீந்தில் கொடியை தேநீராக்கி குடித்து வருவது நல்லது.

கரிசலாங்கண்ணிக் கீரையைக் கூட்டாக செய்துச் சாப்பிடலாம். கீழாநெல்லியை புளியங்கொட்டை அளவு வெறும் வயிற்றில் மாதந்தோறும் ஐந்து நாளைக்குச் சாப்பிட வேண்டும்.

மாதத்தில் இரண்டு நாள்கள் வேப்பம்பூ ரசம் வைத்துச் சாப்பிடுங்கள்.

வில்வ பழச்சதையை நாட்டுச் சர்க்கரையுடன் சேர்த்துச் சாப்பிடலாம்.

திராட்சை பழச்சாற்றை அருந்தி வந்தால் கல்லீரல், மண்ணீரல் உறுப்புகளுக்கு நன்மையைச் செய்யும்.

## மலக்குடல்

அகத்திக்கீரையை வாரம் ஒருநாள் சமைத்துச் சாப்பிட வேண்டும். இதனால், மலக்குடல் சுத்தமாக இருக்கும்.

பப்பாளிப் பழத்தை வாரம் மூன்றுமுறை சாப்பிடுவது நல்லது.

அடிக்கடி முளைக்கீரையை சமையல் செய்து சாப்பிட்டு வரலாம்.

நார்த்தங்காய் ஊறுகாயை அளவுடன் சாப்பிடுவது நல்லது. செரிமானச் சக்தி மேம்படும்.

மாலை ஆறு மணி அளவில், மாம்பழ சீசனில் மாம்பழத்தைத் தொடர்ந்து சுவைத்து வரலாம்.

மாதுளைப்பூ சாறு 15 மி.லி, சிறிதளவு பனங்கற்கண்டு சேர்த்து மூன்று வேளையும் குடித்து வரவேண்டும்.

## பாதம்

கண்டங்கத்திரி இலையுடன் தேங்காய் எண்ணெயை ஊற்றிச் சாறு பிழிந்துத் தடவினால் கால் வெடிப்பு சரியாகும்.

விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய் சம அளவு எடுத்து பாதத்தில் தடவி வந்தால்



பாதம் மிருதுவாக இருக்கும்.

லேசாக சூடு செய்த வேப்பெண்ணெயை விரல்களின் இடுக்கில் தடவினால் சேற்றுப் புண்கள் சரியாகும்.

வாழைப்பூவை பருப்பு சேர்த்துச் சமைத்து சாப்பிட்டு வந்தால், கை, கால்களில் வரும் எரிச்சல் நீங்கும்.

இரண்டு கால் விரல்களையும் தினமும் ஐந்து நிமிடத்துக்கு நீட்டி மடக்கும் பயிற்சியைச் செய்து வரவேண்டும். ரத்த ஓட்டம் சீராகும். பாதம், விரல் வலி சரியாகும்.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள், மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ் புக் ஒர்க்,
அட்டைப்பட வடிவமைப்பு, நாளிதழ்கள்,
போன்றவை தரமாகவும் குறைந்த
செலவில் செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: 08825844033

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

# விசுக்தி சக்கரத்தை ஆகாய ஸ்தானம் என்று யோகிகள் கருதுகிறார்கள்



மனிதனது உடம்பில், விசுத்தி சக்கரம் ஐந்தாவது நிலையில் இருக்கிறது. கீழிருந்து மேல்நோக்கி போகும் போது, இது ஐந்தாவது நிலையில் இருந்தாலும், குண்டலினி பாதையில் குண்டலினி சக்தியை தொடுவதற்கு மிக அருகினில் இருப்பதனால், இதை குண்டலினி நிலைக்கு முந்தையது, இரண்டாவது தகுதியில் இருப்பது என்று சொன்னாலும், அதுவும் சரியாகத்தான் இருக்கும். காரணம் விசுக்தியை தொட்டபிறகு குண்டலினி சக்தி தான் அடையவேண்டிய இறுதி லட்சியம்.

இந்த சக்கரம் பதினாறு இதழ் கொண்ட அழகிய தாமரை பூ வடிவத்தில் இருக்கிறது. தாமரை வடிவத்தில் இருந்தாலும் இதன் நிறம் செம்மை அல்ல பசுமையாகும். அடர்ந்த நீலம் கரைந்து கரைந்து தனது வடிவத்தை முற்றிலுமாக இழக்கும் போது, பசுமை வடிவத்தில் வருமென்று வண்ண கலவைகளின் தத்துவம் அறிந்தவர்கள் கூறுவார்கள். அடர்ந்த கருமை வண்ண வானம், சூரிய வெளிச்சத்தால் வெளிர் நீலமாகி மனித கண் கொண்டு உற்று பார்க்கும் போது, வெளிர் பச்சை நிறத்தில் தான் தெரியும். அதனால் தான் விசுக்தி சக்கரத்தை ஆகாய ஸ்தானம் என்று யோகிகள் கருதுகிறார்கள்.

இந்த ஆகாய ஸ்தானத்தில் அருள் செய்யும் சக்தியாகிய, அன்னை டாகினி என்பவள் நிறைந்திருக்கிறாள். டாகினி தேவி ஒருமுகம் கொண்டவள். ஆகாயம் பலமுகம் கொண்டது அல்ல. பிரபஞ்ச வெளியில் எங்கிருந்து பார்த்தாலும் ஒரே தன்மை உடையது என்பதை மனதில் வைக்க வேண்டும். இந்த ஆகாய தேவி, பாதிரி பூவின் நிறம் போல வெண்மை கலந்த சிவப்பு வண்ணம் உடையவள். கைகளில் கட்வாங்கம், கத்தி, சூலம் மற்றும் கேடயம் ஆகிய ஆயுதங்களை தாங்கியவளாக இருக்கிறாள்.



விசுக்தி சக்கரம் பதினாலு இதழ் கொண்ட என்று முதல் பத்தியில் பார்த்தோம். பதினாறு இதழ்கள் என்பது வடமொழியில் உள்ள பதினாறு உயிர் எழுத்துக்களின் வடிவமாகவும் இருக்கிறது ஒவ்வொரு இதழிலும் அம்ருதா, ஆகர்ஷின், இந்த்ராணி, உமா, ஊர்த்வகேசி, ருத்திகா, ஈசானி, ரூகாரா, லுகாரா, லூகாரா, ஏகபாதா, ஐஷ்வர்யாத்மீகா, ஓங்காரா, ஔஷதி, அம்பிகா, அக்ஷரா என்ற பதினாறு தேவிகள் உயிர் எழுத்தின் துவக்க எழுத்தாக கொண்டு அமர்ந்திருந்து ஆட்சி செய்கிறார்கள்.

இந்த சக்கரத்தில் குண்டலினி சக்தியானது பயணப்பட்டு வருகின்ற போது மனிதனுக்கே உரிய நான், எனது என்ற அகங்காரம் அழிந்து போகிறது. நாலு திசையிலும் கட்டுக்கடங்காமல் ஓடிக் கொண்டே இருக்கும் மனம், சந்திர மண்டலத்தில் உள்ள அமிர்தமான நீர் தடாகத்திற்குள் விழுந்து முற்றிலுமாக கரைந்து, மறைந்து உருவங்கள் அற்ற அருவமான பிரம்மத்தை நோக்கிய தியானத்தில் லயித்து விடுகிறது. இப்படி லயிக்கும் போது, குண்டலினி சக்திக்கு அதீத சக்தி உருவாகி ஒரே பாய்ச்சலில் ஆஞ்ஞை சக்கரத்தில் போய் உட்கார்ந்து விடுகிறது.

ஆஞ்ஞை என்பது ஆறாவது சக்கரம். இதுவே இறுதி சக்கரம். நமது இரண்டு புருவங்களுக்கு நடுவே இரண்டு இதழ் கொண்ட தாமரை பூ போல இது இருக்கிறது. இது அலைபாய்ந்து கொண்டிருக்கும் மனதின் ஸ்தானமாகும். இங்கு குண்டலினி சக்தி வருகின்ற போது, நிலம், காற்று, நீர், தீ மற்றும் ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களால் உருவான மனது நசிந்து விடுகிறது. எனவே தான் ஆஞ்ஞை


ஆன்மிகமலர் மெயில் புக்




சக்கரத்தின் அதிபதியான ஹாகினி தேவிக்கு பஞ்சபூதங்களின் ஐந்து வடிவமும், மனதின் ஒருவடிவமும் சேர்ந்து ஆறு முகங்கள் அமைந் திருக்கிறது.

இந்த தேவி நான்கு கை உடையவளாக இருக்கிறாள். உடுக்கை, அக்ஷமாலை ஞான முத்திரை, கபாலம் ஆகியவைகள் அவள் கைகளிலே இருக்கிறது. இந்த தேவி மனித உடம்பில் உள்ள எலும்புகளில் இருக்கும் மஜ்ஜையில் தனது சக்தியை நிலை நிறுத்துகிறாள். இவளே விசுக்தி முதலாகிய ஐந்து சக்கரங்களின் தலைவி ஆவாள். ஐந்து சக்கரங்களின் செயல்பாட்டையும் ஹாகினி தேவியே முன்னின்று நடத்துகிறாள். ஆஞ்ஞை எனும் ஈரிதழ் தாமரையில், ஒருபக்கம் ஹம்சவதி தேவதையும், இன்னொருபக்கம் ஷமாவதி தேவதையும் பரிவார தேவதைகளாக இருந்து ஹாகினி தேவதைக்கு தொண்டு செய்கிறார்கள்.

சக்கரங்களில் இறுதி சக்கரமாக ஆஞ்ஞை இருந்தாலும், இது குண்டலினி சக்தியின் முடிவான உறைவிடம் அல்ல. அதனால் தான் நமது ஞானிகள் இதற்கு ஆஞ்ஞை என்று பெயரிட்டார்கள். அப்படி என்றால், சிறிது வெளிப்படுதல் என்பது பொருளாகும். அதாவது குண்டலினி சக்தி தான் இன்னார் என்றும், தனது சக்தி இன்னதென்றும் ஒரு சிறிது நேரம் வெளிப்படுத்துவதற்கே இந்த சக்கரம் துணை செய்கிறது. இதை தொட்டுவிட்ட குண்டலினி, மனித முயற்சி இல்லாமலே இறைவனின் கரு ணையால் ஆயிரம் இதழ்கொண்ட தாமரையின் வடிவமான சகஸ்ரத்தை அடைந்து தனது பயணத்தை முடித்து கொள்கிறது.

குண்டலினி சக்தி சகஸ்ரத்தை தொடும் நிகழ்வை வைதீகர்கள் சொர்க்கம் என்கிறார்கள். சித் தர்களும், ஞானிகளும் முக்தி என்கிறார்கள். கௌதம புத்தர், மகாவீரர் போன்ற அவாதார புரு ஷர்கள் பரிநிர்வாணம் என்கிறார்கள். எந்த பெயரிட்டு அழைத்தாலும், அந்த நிகழ்வு இறைவனும் மனிதனும் ஒரே நேர்கோட்டில் வருகின்ற நிகழ்வாகும். அதாவது எலும்பும், சதையும் கொண்ட மனிதன், நேருக்கு நேராக இறை தரிசனத்தை பெறுகிறான் அல்லது இறைவனை உணர்கிறான் எனவே குண்ட லினி யின் சகஸ்ர நிகழ்வு விரிவாக பார்க்க கூடியது.

எனவே இறை தரிசனத்தின் முழுமையான இரகசியத்தை உணர்வதற்கு முன்பு, அதை பெறக்கூடிய மனிதனின் தத்துவப்பூர்வமான வாழ்க்கை எப்படி இருக்கும், எப்படி அமையவேண்டும் என்பதை தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமாகும். எனவே சித்தர்களின் தத்துவங்களுக்கு மத்தியில் சஞ்சாரம் செய்து, அதன்பிறகு சகஸ்ர அனுபவத்தை உணர்ந்து கொள்வதே சரியான மார்க்கமாகும். அதனால், இதுவரையில் அதிகமாக பேசப்படாத சித்தர் தத்துவத்தின் மிக நுட்பமான பகுதிகளை நமது சிற்றறிவு கொண்டு அறிய முயற்சிப்போம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்





aanmeegamalar.com
இணையதளத்தின்
mobile app
GET IT ON Google Play
அனைத்து செய்திகளும், இ-புத்தகத்தையும்
இனி உங்கள் மொபைலில் படித்து மகிழலாம்.
ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்
கூகுல் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள்,
உடல்நலன், பலன்கள், இ-புத்தகம் போன்றவற்றை
எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில்
பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.
அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்



# சபரிமலை

## உண்மை வரலாறும், உட்புகுத்தப்பட்ட கருத்துக்களும்

**சபரிமலை யாத்திரை என்பது பெரிய பாதையில் மட்டும் 78 நாட்கள் இருக்கும் வகையிலேயே அமைந்திருந்தது.**

திரு. அரவிந்த் சுப்ரமணியம் (Aravind Subramanyam) அவர்கள் எழுதிய அய்யப்பன் வரலாறு என்ற புத்தகத்தில் இருந்து முக்கிய பகுதிகள் மட்டும் இங்கே உங்களுக்காக.

இவர் எழுதிய புத்தகத்தில், சபரிமலை, மாளிகை புரத்தம்மன், வாவர் சுவாமி பற்றிய கட்டுகதைகள் மற்றும் பெண்கள் வரக்கூடாததற்கான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. வரலாற்றை உங்களுக்காக கீழே பதிவிடுகிறேன்.

### சபரிமலைக் கோவிலின் புராண சரிதம்

மஹாவிஷ்ணு மோகினியாக உருக்கொண்டு அவதாரம் எடுத்து, சிவ விஷ்ணு சக்திகள் சங்கமமாக – கர்ப்பவாசம் புரியாமல் சங்கல்ப மாத்திரத்தில் அவதரித்தவர் மஹாசாஸ்தா. இங்கே புரிந்துகொள்ள வேண்டிய விஷயம் சிவ விஷ்ணு சங்கமம் என்பது சக்திகளின் சேர்க்கையே. உடல் சேர்க்கை அல்ல.

சாஸ்தாவின் ஆவிர்பாவம் ஆனதும் அவர் கைலையங்கிரியில் தனக்கென ஓர் உலகத்தை உருவாக்கி, பூரணை புஷ்கலை எனும் இரு தேவியரை மணந்து அவ்வுலகிலிருந்து அருளாட்சி நடத்தலானார்.

மஹிஷி எனும் அரக்கியை அழிக்கும் பொருட்டு, மனித அவதாரம் எடுக்கத் தீர்மானித்து, ஆகாய கங்கைவழியாக பம்பையாற்றங்கரையில் ஒரு குழந்தையாகத் தோன்றினார். பரமசிவன் கொடுத்த நவரத்தின மணிமாலையைக் கழுத்தில் அணிந்திருந்த காரணத்தால் மணிகண்டன் என்று பெயரிடப்பட்டார், (எல்லோரும் கருதுவது போல, அடிக்கும் கோவில் மணியல்ல ஸ்ரீ சம்ஸ்க்ருதத்தில் அதற்கு கண்டா என்று பெயர். மணி என்றால் நவரத்தின மணி என்றே பொருள். மணிப்பூர் என்றொரு மாநிலம் உள்ளதும் இங்ஙனமே. Land of Jewel என்றே அதற்குப்பெயர்.)



கழுத்தில் நவரத்தினமணிகள் ஜொலித்த காரணத்தால் மணிகண்டன் என்று பெயரிட்டு ராஜசேகர பாண்டியன் வளர்த்து வந்தான். அவதார நோக்கத்துக்காக பால பிரம்மச்சாரியாகவே வாழ்ந்த மணிகண்டன் – மஹிஷியை சம்ஹாரம் செய்து, கலியுக வரதனாக கோவில் கொள்ளத் தீர்மானித்தான். சாஸ்தாவின் அவதாரமான மணிகண்டனை மஹா யோகபீடமாக விளங்கும் ஸ்தலமான சபரி பர்வதத்தில் பரசுராமர் பிரதிஷ்டை செய்தார்.

உலக நன்மைக்காக யோகத்திலேயே ஆழ்ந்து தவக்கோலம் பூண்ட மணிகண்டன் வருடத்தில் ஒருநாள் மகர சங்க்ரமத்தன்று கண்விழித்து பக்தர்களை அனுக்ரகிப்பேன் என்று வாக்களித்தார்.

பாண்டியர்களின் குருவான அகத்திய மாமுனிவரே சபரிமலைக்கான விரத வழிமுறைகளைக் கொடுத்தவர். ஒரு மண்டல பிரம்மச்சர்யாதி விரதங்களை மேற்கொள்ளுவோரே சபரிமலை செல்லத் தகுதி உடையவர் என்று வகுத்தளித்தார்.

சபரிமலைக் கோவிலின் ஸ்தலபுராணம் இதுவே. பிரமாண்ட புராணத்தின் பூதநாதோபாக்யானம் என்ற கேரளகல்பப் பகுதியில் நமக்குக் கிட்டும் புராண சரிதம்.

புராண காலம் தொட்டே சபரிமலை ஆலயம் உண்டென்றாலும் – வருடம் ஒருநாள் மட்டுமே வழிபாடு என்பதால் வந்து செல்லும் பக்தர் கூட்டம் மிகக் குறைவு.

விரத அனுஷ்டானங்கள் பெண்களுக்கு நடைமுறைப்படுத்த முடியாத காரணங்களால் ஆண்கள் மட்டுமே சபரிமலை சென்றார்கள். (இன்றைக்குமே பெண்கள் செல்லவே முடியாத, ஆண்களுமே 15–16 வயதுக்குப் பின்னரே அனுமதிக்கப்படும் பல சாஸ்தா ஆலயங்கள் உண்டு.)

### வரலாற்று நாயகன் ஐயப்பன்:

புராண சரிதம் கடந்து பல நூற்றாண்டுகள் தாண்டி, பத்தாம் நூற்றாண்டில் பாண்டிய வம்சம் கேரளத்தில் புலம் பெயர்ந்து, பூஞ்சார், பந்தளம் எனக் கிளைகளாகப் பிரிந்தது. சபரிமலைக் கோவிலை பந்தள வம்சம் பராமரித்து வந்தது. அப்போதைய சபரிமலைப் பகுதி காட்டில் எல்லையாக விளங்கிய காரணத்தால், வணிகர்களின் நடமாட்டம் மிகுந்தது. வணிகர்கள் மிகுந்ததால் ஒரு காலகட்டத்தில் அப்பகுதி கொள்ளையர் வசமானது.

கொள்ளையர் தலைவன் உதயணன் என்பவன் சபரிமலை ஆலயத்தைத் தீக்கிரையாக்கி அழித்தான். பாண்டிய வம்சமான பந்தள ராஜ குடும்பத்தில், ராஜகுமாரிக்கு தெய்வாம்சத்துடன் ஆர்ய கேரள வர்மன் என்ற ஓர் மகன் பிறந்து, சபரிமலைக் கோவிலைப் புனர்நிர்மாணம் செய்து மீண்டும் அங்கே சாஸ்தாவின் விக்ரகத்தை பிரதிஷ்டை செய்கிறான். ஆர்ய கேரள வர்மன் என்ற அந்த ராஜகுமாரனின் செல்லப்பெயரும் ஐயப்பன். சபரிமலையின் தேவதையான மணிகண்ட சாஸ்தாவின் பெயரே கேரள வர்மனுக்கும் இருந்ததால் பின்னாளில் சிலபல குழப்பங்கள் உண்டாயின.

இஸ்லாமியரான வாவர் என்ற கதாபாத்திரம் கதைக்குள் நுழைந்தது இந்தக் காலகட்டத்தில்தான். அது புராணக் கதை அல்ல.

## யாத்திரையின் நடைமுறை:

இது இப்படி இருக்க, கேரள மக்கள் சபரிமலை தர்மசாஸ்தாவை தங்கள் ரட்சக தேவதையாக ஆராதித்து சபரிமலை யாத்திரை செல்வது தொடர்ந்தது. ஆண்கள் மட்டுமே யாத்திரை மேற்கொண்டார்கள். சபரிமலை யாத்திரைக் கிரமங்களில் பண்டைய கால நடைமுறை ஸ்ரீ இருமுடி கட்டி அவரவர் வீட்டிலிருந்தே நடந்தே செல்வது. பகவான் மணிகண்டன் கட்டிக்கொண்டு போன இருமுடி போல, யோகத்தில் இருக்கும் பகவானுக்காக காராம்பசுவின் நெய்யை இருமுடியில் அடைத்து அவனுக்காக ஆத்ம சமர்ப்பணமாகக் கொண்டு சென்றார்கள்.

நடைபாதையாக வரும் பக்தர்கள் சென்றடையும் முதல் கேந்திரம் எருமேலி. பண்டைய கால நடைமுறை பற்றிக் கேட்டால் வியப்பு உண்டாகிறது. காளார்காடு அப்பு ஐயர் என்ற பக்தர் 1850களில் சபரிமலை வெளிச்சப்பாடு ஸ்தானம் வகித்து வந்தார். அவரே எருமேலி வரும் பக்தர்களின் விரதத்தை அங்கீகரித்து பெரியபாதைக்குள் செல்ல அனுமதிப்பார். அனுமதி இல்லாதோர் மீண்டும் வீடு திரும்பித்தான் வேண்டும். இதுவே அப்போதைய நடைமுறை.

பகவான் மணிகண்டன் பயணப்பட்ட வழியே பெரிய பாதை எனப்படும் பாரம்பரியப் பாதை. இதனையே பகவானின் பூங்காவனம் என்பார்கள். எருமேலி துவங்கி கரிமலை கடந்து சன்னிதானம் அடையும் கிட்டத்தட்ட 41 மைல் கொண்ட பாதை. பண்டைய காலத்தில் சபரிமலைப் பயணம் என்பது எருமேலியில் வணங்கி, பெரியபாதை வழியே வந்து, பதினெட்டாம் படி ஏறி சாஸ்தாவை வணங்கி, மீண்டும் பெரியபாதை வழியே நடந்து திரும்புவது. அல்லது பெரியபாதை வழியே வந்து, புல்மேட்டுப் பாதை வழியே ஏறி, வண்டிப்பெரியார் குமுளி வழி திரும்புவது. சபரிமலை யாத்திரை என்பது பெரிய பாதையில் மட்டும் 78 நாட்கள் இருக்கும் வகையிலேயே அமைந்திருந்தது.



இந்திய சுதந்திரம் அடையும் முன்பு ஒன்றிணைந்த தமிழககேரளத்தில், கேரள மக்களும், நெல்லை, குமரி பகுதி மக்களும், கோவை பாலக்காட்டு மக்களும் சபரிமலை யாத்திரையை சகஜமாக மேற்கொண்டவர்களே. என்னுடைய சிறிய பாட்டனார் ஸ்ரீ சிக்ஷி.கிருஷ்ண ஐயர் 1920–30களிலேயே சபரிமலை யாத்திரை மேற்கொண்டவர். அவருடைய டைரிக் குறிப்புகளில் கையில் அரிவாளுடன் பாதையை செப்பனிட்டுக்கொண்டு சென்ற சபரிமலைப் பயணம் பற்றி விவரித்திருக்கிறார். மற்ற தமிழகப் பகுதி மக்களுக்கு, நியமங்களுடன் கூடிய சபரிமலை யாத்திரை என்பது புதிய ஒன்றாக இருந்தது.

## ஸ்வாமி ஐயப்பன் நாடகம்

இப்படி இருந்த சூழ்நிலையில், கிட்டத்தட்ட 1940களில் ஒருமுறை கேரள மாநிலம் ஆலப்புழையில் நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை நாடகம் போட தன் குழுவுடன் வந்திருந்தார். அப்போது ஒரு பக்தர் ராஜமாணிக்கம் பிள்ளையைத் தொடர்புகொண்டு ஐயப்பன் கதையை நாடகமாகப் போடச் சொல்லிக் கேட்டுக் கொண்டார். ஆரம்பத்தில் தயக்கம் காட்டிய ராஜமாணிக்கம் பிள்ளை, ஐயப்ப சரிதத்தைக் கேட்டவுடன் மனம் உருகி சபரிமலைக்குப் பயணப்பட்டார். அவருடன் நாடகக் குழுவில் பயணப்பட்ட நடிகர் மஞ்சேரி நாராயணன் என்பவரே பிற்காலத்தில் நம்பியார் குருசுவாமியாக அறியப்பட்ட எம்.என்.நம்பியார்.

**சபரிமலையின் தேவதையான மணிகண்ட சாஸ்தாவின் பெயரே கேரள வர்மனுக்கும் இருந்ததால் பின்னாளில் சிலபல குழப்பங்கள் உண்டாயின. இஸ்லாமியரான வாவர் என்ற கதாபாத்திரம் கதைக்குள் நுழைந்தது இந்தக் காலகட்டத்தில்தான். அது புராணக் கதை அல்ல.**

முதன்முதலில் தமிழகத்தில் திருநெல்வேலி கல்லிடைக்குறிச்சியில் ஸ்வாமி ஐயப்பன் நாடகம் அரங்கேற்றப்பட்டது. நாடகம் மக்கள் மனதை ஈர்த்து தமிழகம் எங்கும் மக்கள் சபரிமலையை நாட ஆரம்பித்தார்கள். நாடகம் போட்ட நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை, தான் கேட்ட கதைகள் பலதையும் திரைக்கதையில் இணைத்து விட்டார். அதன் நம்பகத்தன்மையை முழுமையாக அவர் ஆராயவில்லை. முடிவாக : புராண காலத்து ஐயப்பனும் வரலாற்று ஐயப்பனும் குழப்பப்பட்டு விட்டார்கள். நாடகத்தில் இடைவேளைக் காட்சியில் மேடையில் கடல், கடலில் கப்பல், கப்பலில் வாவர் என ஜனங்கள் வாய்பிளந்து பார்த்தார்கள். அதுவே மனதில் நின்றுவிட்டது. இன்று ஏதோ வாவர் பள்ளிக்குப் போனால்தான் சபரிமலைக்குப் போன பலன் கிடைக்கும் என்று நம்பும் அளவுக்கு அது வளர்ந்து விட்டது. பின்னாளில் வந்த புத்தகங்களும் இதே கதைகளையே சொல்ல ஆரம்பித்துவிட்டன.

புனலூர் சுப்ரமண்ய ஐயர், என்னுடைய தாத்தா சிக்ஷி ஸ்ரீநிவாஸ ஐயர், தளிப்பறம்பா நீலகண்ட ஐயர் முதலான பண்டைய குருமார்கள் தொட்டு தாணுலிங்க நாடார், எம்.என்.நம்பியார் வரை யாருமே வாவர் பள்ளிக்குச் செல்வதை ஏற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இது போன்றே அடுத்த குழப்பம் ஸ்ரீ மாளிக்கைப்புறத்தம்மன் ஐயப்பனை திருமணம் செய்யக் காத்திருப்பதாகக் கூறப்படும் வரலாறு. இதெல்லாம் நாடகத்தில் சுவைக்காகச் சேர்க்கப்பட்ட சம்பவங்கள். புராண ஆதாரம் ஏதும் கிடையாது. மாளிகைப்புறத்தம்மனுக்கு உருவம் கிடையாது. பல கேரள ஆலய பகவதி ஸங்கல்பம் போலவே கண்ணாடி பிம்பமாகவே இன்றும் பூஜிக்கப்படுகிறாள். மேலே கவசமே சார்த்தப்படுகிறது. அவள் துர்கா லக்ஷ்மி சரஸ்வதி ஸ்வரூபமாகவே பூஜிக்கப்படுகிறாள். பாண்டிய குல தேவதையான மீனாக்ஷி ஸங்கல்பம் என்பதே பந்தள அரண்மனையின் நம்பிக்கை. அவள் ஐயப்பனுக்கு தாய் ஸ்தானமே அல்லாது, இணையாக புராணத்தில் எங்குமே சொல்லப்படவில்லை. மகரவிளக்கு உற்சவத்தில் யானை மீது சரங்குத்திக்கு பவனிவருவது மாளிகைப்புறத்து அம்மன் என்றே பலரும்

கருதுகிறார்கள். உண்மையில் பவனி வருவது ஐயப்பனே அந்த பிம்பத்தில் தெள்ளத் தெளிவாக மீசை உள்ளதைக் காணலாம்.

## சபரிமலையும் திருவிதாங்கூர் அரசும்

1780–களில் தர்மராஜா என்று அழைக்கப்படும் கார்த்திகைத் திருநாள் ராமவர்மா காலத்தில் திப்புவின் கேரள ஆக்ரமிப்பு துவங்கியபோது, போர்ச் செலவுகளைச் சமாளிக்க முடியாத பந்தள அரசு, தனது மொத்தச் சொத்துக்களையும் திருவிதாங்கூர் அரசிடம் அடைமானம் வைத்தது. அடைமானத்தை மீட்க முடியாத நிலை உருவாகி, சபரிமலைக் கோவில் உட்பட மொத்தமும் திருவிதாங்கூர் அரசர் வசமானது. சபரிமலை ஆலயம் திருவிதாங்கூர் ஆளுகைக்குச் சென்றது இப்படித்தான்.

வழக்கமாக ஆலயத்தைக் கையகப்படுத்தும் போது அதன் நகைகளையும் எடுத்துக்கொள்ளும் அரசு, சபரிமலை விஷயத்தில் திருவாபரணத்தை பந்தள அரசரிடமே இருக்கும்படியும், அவரே மகர ஸங்க்ரமத்துக்குக் கொண்டு வரும் சம்பிர தாயத்தைத் தொடரும்படியும் சொல்லியது.

இந்திய சுதந்திரத்துக்குப் பின் திருவிதாங்கூர் அரசர் சித்திரை திருநாள் பாலராமவர்மா தன் கட்டுப்பாட்டுக்குள் இருந்த கோவில்களை தனி அமைப்புடன் இணைத்தார். அதுவே திருவிதாங்கூர் தேவஸ்வம் போர்டு. இப்படித்தான் சபரிமலை நிர்வாகம் திருவிதாங்கூர் போர்டு கையில் சென்றது. தேவஸ்வம் போர்டு கேரள அரசின் ஒரு அங்கம் ஆனது.

## சபரிமலையில் புனர் பிரதிஷ்டை

சபரிமலையில் பகவானின் யோகாக்னி காரண மாக ஆலயம் பலமுறை தீ விபத்துக்களைச் சந்திக்கும் என்பது பெரியோர் நம்பிக்கை. அதே போல ஆலயம் பலமுறை தீ விபத்துக்களைச் சந்தித்துள்ளது. பல முறை விக்ரஹமும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. கல்விக்ரஹம், பஞ்சலோகம் எனப் பலமுறை மாற்றப்பட்டது. 1800களில் பல வருடங்கள் தாரு சிலை என்று சொல்லப்படும் மரவிக்ரஹம் கூட இருந்தது. இந்தக் காலகட்டத்தில்தான், மர விக்ரஹத்தில் நெய் அபிஷேகம் நேரடியாகச் செய்ய முடியாமல் இருமுடி நெய்யை நெய்த்தோணியில் கொட்டிவிடும் பழக்கம் உண்டானது. அன்று பெரும்பாலும் வந்தவர்கள் கேரளத்தவர்களே. இன்றும் அந்தக் குறிப்பிட்ட சில ஊர்க்காரர்கள், இருமுடி நெய்யைக் கருவறையில் ஸ்வாமிக்கு அபி ஷேகம் செய்வதில்லை. நெய்த்தோணியிலேயே நெய்யைக் கொட்டி அதிலிருந்து சிறிதளவு பிரசாதம் எடுத்துச் செல்கிறார்கள்.

பின்னர் பஞ்சலோக விக்ரஹம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1902ல் ஒரு தீவிபத்து ஏற்பட்டு, மேல்சாந்தியின் முயற்சியால் விக்ரஹம் காப்பாற்றப்பட்டு, 1904ல் புனர்பிரதிஷ்டை செய்யப் பட்டது. முழு ஆலயமும் சீரமைக்கப்பட்டது. அப்போது வேறு பாதை இல்லை. எல்லாக் கட்டு மானப்பொருட்களும் பெரிய பாதை வழியாகவே சன்னிதானம் வந்தடைய வேண்டும்.

பந்தளம் அரண்மனையிலிருந்து திருப்பணிக் காக மரங்கள் எருமேலிக்குக் கொண்டு வரப்பட்டன. அழுதைவரை மரங்களைக் கொண்டு வந்துவிட்ட தொழிலாளர்கள் கல்தூண் போல கனத்த மரங்களை இனி மலையேற்ற முடியாது என்று பிரமித்துக் கைவிரித்தார்கள்.

திடீரென எங்கிருந்தோ அங்கே வந்து சேர்ந்த ஒரு பக்தர், உரத்த குரல் கொடுத்தார். ஆவேசம் வந்தவர் போல ஒரு பரவச நிலையில் காணப்பட்ட அவர், கட்டளை போல ஒரு வாக்கினைச் சொன் னார்: "இனி இந்தத் தூண்களை சுமப்பவர்கள், சன்னிதானம் அடையும் வரை எந்தச் சுமையையும் உணரவே மாட்டார்கள்." இவரது ஆவேசத்தால் உந்தப்பட்ட தொழிலா ளர்கள் அவரது சத்திய வாக்குக்கு ஏற்ப சுமையே இல்லாமல் மயிலிறகு போலச் சுமந்து சென்றார்கள்.

சன்னிதானம் அடைந்து எல்லாவற்றையும் கீழே வைக்கும் வரை அதே ஆவேசத்துடன் உடன் இருந்த அந்த பக்தர், அடுத்த நொடி யார் கண்ணிலும் காணாமல் மறைந்து விட்டார். அப்படி உருவாக்கப்பட்டதே இன்று நாம் காணும் சபரிமலை அமைப்பு.

– நன்றி: அரவிந்த் சுப்ரமணியம்,
Ph: 09994641801

அடுத்த இதழில்....

அடுத்த இதழில்
சின்னப்பாதை உருவான விதமும்
டோலி முறை உருவான சுவாரஸ்யமும்
பக்திக்கு மதிப்பளித்து குறிப்பிட்ட வயது
பெண்களை அனுமதிக்காத
வெள்ளைக்கார அரசு





# ஐயோ வேண்டாம்

ஒரு மரவெட்டி மரத்தின் கிளைமீது அமர்ந்து கொண்டு அந்தக் கிளையையே வெட்டினானாம்.

உமாதேவியார் பார்த்துவிட்டு, இவன் என்ன முட்டாளாக இருக்கிறானே, கீழே விழுந்து சாக அல்லவா போகிறான் என்று சிவபெருமானிடம் சொன்னாராம். அதற்கு அவர் சொன்னாராம், சரி அவன் உதவிக்கு உன்னைக் கூப்பிட்டால் நீ போய் காப்பாற்று; என்னைக் கூப்பிட்டால் நான் காப்பாற்றுகிறேன் என்றாராம்.

இருவரும் மிகவும் கவனமாக அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தார்களாம்.

அவன் இருந்த கிளை இறுதியாக முறிந்து விழுந்தது. அவன் "ஐயோ" என்று கதறிக்கொண்டே கீழே விழுந்தான். விழுந்த வேகத்தில் செத்துப்போனான்.

உமாதேவியார் என்ன இறந்துபோனானே என்றாராம். அதற்கு சிவன் சொன்னாராம், அவன் எமனின் மனைவி "ஐயோ" வை அல்லவா கூப்பிட்டான். அதான், ஐயோ வந்து அவன் உயிரை எடுத்துக்கொண்டு போய்விட்டார் என்றாராம்.

இதனால்தான் எந்த செயலைச் செய்யும் போதும் "ஐயோ" என்று சொல்லக்கூடாது என்பதற்காக நம் முன்னோர் கூறிய கதைதான் இது.

நமக்கு தெரியாமல் நம்மைச் சுற்றி தேவதைகள், தேவதூதர்கள் இருப்பார்களாம். நாம் சொல்வதற்கெல்லாம் 'ததாஸ்து' அப்படியே ஆகட்டும் என்று வரம் கொடுப்பார்களாம்.

இனி பேசும் போது மிக கவனமாக பேச வேண்டும். தீய வார்த்தைகளை குறைத்து நன்மை தரும் வார்த்தைகளையே பயன்படுத்துவோம். உதாரணமாக, "ராம்... ராம்..."... "சிவசிவ" என்ற வார்த்தைகளையே பயன்படுத்துவோம்.

– ஆன்மிக ஜோதிட ஆசான்
மு.கிருஷ்ண மோகன். 8526223399

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 08825844033

# ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி

ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி என்பது ஐந்து பெண் மக்களைப் பெறுவதைக் குறிக்கவில்லையாம்..!

கீழ்கண்ட விபரப்படிக்கான ஐந்து பேரைக் கொண்டிருப்பவன், அரசனே ஆனாலும் கூட அவனது வாழ்க்கைவே அழிவை நோக்கி போகு என்பதுதான் உண்மையான அர்த்தம்

1. ஆடம்பரமாய் வாழும் தாய்,
2. பொறுப்பில்லாமல் வாழும் தந்தை,
3. ஒழுக்கமற்ற மனைவி,
4. ஏமாற்றுவதும் துரோகமும் செய்யக்கூடிய உடன் பிறந்தோர் மற்றும்
5. சொல் பேச்சு கேளாத பிடிவாதமுடைய பிள்ளைகள் என்பதாகும்..



# தெய்வத்தின் மீது சுமத்தப்படும் குற்றம்

மக்கள் பொதுவாக வாழ்க்கையிலுள்ள குறைபாடுகளையெல்லாம் தங்களுடன் வாழ்பவர்கள் மீதோ, அல்லது அது தவறினால் தெய்வத்தின் மீதோ சுமத்துகிறார்கள். அல்லது புதிதாக அவர்கள் ஏதோ பேய் பிசாசு என்று கற்பித்துக் கொண்டு, அதைத் தலைவிதி என்று சொல்கிறார்கள். விதி என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? எதை விதைத்தோமோ அதைத்தான் அறுவடை செய்கிறோம். நமது விதியை நாமே வகுத்துக்கொள்கிறோம். எனவே, அதன் பொருட்டுத் தூற்றுவதற்கும் ஒருவருமில்லை; பாராட்டுவதற்கும் ஒருவருமில்லை. நான் அனுபவித்துக் கொண்டிருக்கும் இந்தத் துன்பம், என்னுடைய சொந்தச் செயல்களாலேயே உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒரு நிலையே, என் ஒருவனால் மட்டுமே அது நீக்கப்பட வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்.....

# செங்கல்லின் மகிமை

குழந்தைகள் அடிகடி கீழே விழுந்துக் கொண்டே இருந்தால், செங்கலால் திருஷ்டி சுற்றி, பிறகு அந்த திருஷ்டி கழித்த செங்கல்லை போட்டு உடைத்து அந்த மண்ணை பூமிதாயை மனதில் நினைத்து கொண்டு, செங்கல் மண்ணை குழந்தையின் நெற்றியில் வைத்தால் அந்த குந்தைகளுக்கு திருஷ்டியால் உண்டாகும் பாதிப்பு குறையும்.

# சூரியவம்சம்

அயோத்தியை ஆண்ட வம்சம் சூரியவம்சம். நீதி நேர்மை தவங்மல் ஆட்சிபுரியும் நல்லமன்னர்கள் பிறந்த குலம் இது. எவ்வளவு துன்பம் நேர்ந்தபோதும், உண்மையிலிருந்து விலகாமல் சத்தியம் பேசிய அரிச்சந்திரன், சனிதோஷம் போக்கும் நளச்சக்கரவர்த்தி, பசுக்களுக்கு வாழ்வு தந்த திலீபச்சக்கரவர்த்தி, தசாவதாரங்களில் ஒருவராக வணங்கப்படும் ராமபிரான் ஆகியோர் சூரியகுலத்தில் தோன்றியவர்கள். கொடை வள்ளல் கர்ணனும் சூரியனின் பிள்ளையே. சூரியனை வழிபட்டவர்கள் சூரியகுலத் தோன்றல் களான இந்த மன்னர்களின் நல்லாசியையும் பெறுவர் என்பது உறுதி.


www.aanmeegamalar.com